# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 03 வைகாசி 31

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், சனி, ஜூன் 14, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**அணுசக்தி ஒப்பந்த விவகாரம்: ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் இறுதி எச்சரிக்கை**

...2-ம் பக்கம்

**கடவுள் தான் காப்பாற்றினார்: விமானத்தை தவற விட்ட குஜராத் பெண் நெகிழ்ச்சி**

...3-ம் பக்கம்

**உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி: தென் ஆப்பிரிக்காவுக்கு 282 ரன்களை இலக்காக நிர்ணயித்த ஆஸ்திரேலியா**

...6-ம் பக்கம்





சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது முகாம் அலுவலகத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

### கீழடி அகழாய்வில் மேலும் சான்றுகள் வேண்டுமாம்:

# தமிழர்களின் வரலாற்றை மறைத்து அழிக்க முயற்சி

## மத்திய அரசு மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 14-

**கீழடி அகழாய்வில் கடுமையான பரிசோதனைகள் மூலம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள், இது தொடர்பாக மேலும் சான்றுகள் தேவை என்று தமிழர்களின் வரலாற்றை அழிக்க மத்திய அரசு முயல்வதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டியுள்ளார். மேலும் இந்த விவகாரத்தில் எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**மறைத்து அழிக்க...**

தமிழர்களின் வரலாற்றை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் முயல்கிறார்கள் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள்: மு.க.ஸ்டாலின் எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

> **கீழடி காட்டும் உண்மை அவர்கள் முன்னெடுக்கும் 'ஸ்க்ரிப்ட்'-க்கு எதிரானதாக இருப்பதால்தான். எங்கள் (தமிழர்கள்) வரலாற்றை வெளிக்கொணர பல நூறாண்டுகள் போராடினோம். அதனை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் (மத்திய அரசு) முயல்கிறார்கள்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**சான்றுகள் தேவை...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், கீழடி அகழாய்வில் இருந்து உலக அளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக் கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், ஏ.எம்.எஸ். அறிக்கைகளை அளித்த பின்னரும் மேலும் சான்றுகள் தேவை என்கிறார்கள் அவர்கள். இதோ சான்று. இதற்கு நேர்மாறாக, மதிப்புமிக்க வரலாற்றாய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள் கடுமையாக எதிர்க்கும் நிலையிலும் கற்பனையான சரஸ்வதி நதி நாகரிகத்தை பா.ஜ.க. ஆதரிக்கிறது.

**புறந்தள்ளுகிறார்கள்...**

எந்த நம்பத்தகுந்த சான்றும் இல்லாமல் இதனை அவர்கள் முன்னெடுக்கிறார்கள். ஆனால் நாம் கடுமையான பரிசோதனைகள் மூலம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள். கீழடி மற்றும் தமிழ் மரபுசார் உண்மையைப் பொறுத்தவரை பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ் கும்பல் கதறுவது சான்றுகள் இல்லை என்பதால் அல்ல. கீழடி காட்டும் உண்மை அவர்கள் முன்னெடுக்கும் 'ஸ்க்ரிப்ட்'-க்கு எதிரானதாக இருப்பதால்தான். எங்கள் (தமிழர்கள்) வரலாற்றை வெளிக்கொணர பல நூறாண்டுகள் போராடினோம். அதனை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் (மத்திய அரசு) முயல்கிறார்கள். எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது என தெரிவித்துள்ளார்.

### கடன் வசூல் ஒழுங்கு மசோதா உள்ளிட்ட

# 2 மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல்

சென்னை, ஜூன் 14-

**கடன் வசூல் ஒழுங்கு மசோதா உள்ளிட்ட 2 முக்கிய மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளார்.**

தமிழகத்தில் உயிரி மருத்துவக்கழிவுகளை (பயோ மெடிக்கல் வேஸ்ட்) பொது இடங்களில் கொட்டுவோர் மீது குண்டர் சட்டத்தில் கைது செய்யும் வகையில் கடந்த ஏப்ரல் மாதம் சட்டசபையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா ஏப்ரல் 29ம் தேதி சட்டசபையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மசோதா கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், மருத்துவக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் குண்டர் சட்டத்தில் கைது செய்யும் வகையிலான சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று ஒப்புதல் அளித்துள்ளார். இதன் மூலம் சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

முன்னதாக தமிழக சட்டப்பேரவை ஜனவரி 6-ல் தொடங்கி ஏப்ரல் 29-ல் நிறைவடைந்தது. இந்த பேரவையில் கடன்களை வசூலிக்க சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுவோருக்கு சிறை தண்டனை விதிக்க வகை செய்யும் மசோதாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

கடன் வாங்கியவரின் வீடு, வசிப்பிடம், வேலை அல்லது தொழில் செய்யும் இடம் ஆகியவற்றுக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்த அல்லது கடனை வசூலிக்க, தேவையற்ற செல்வாக்கை பயன்படுத்தி வலுக்கட்டாயப்படுத்துவது, தனியார் அல்லது வெளி தரப்பு முகமைகளின் சேவைகளை பயன்படுத்துவது, அரசு திட்டத்தின்கீழ் உரிமை அளிக்கும் ஆவணங்கள், பிற முக்கிய ஆவணங்கள், பொருட்கள், வீட்டு உடமைகளை வலுக்கட்டாயமாக எடுக்க கோருவது போன்றவை இச்சட்டத்தின் 20-வது பிரிவின் படி வலுக்கட்டாய நடவடிக்கைகளாக கருதப்படும்.

அதன்படி, 20-வது பிரிவில் கூறப்பட்டுள்ள குற்றங்களை செய்தால், 3 ஆண்டு சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். வலுக்கட்டாய நடவடிக்கைகளுக்கு வெளி முகமைகளை பயன்படுத்துவது, ஆவணங்களை எடுப்பது போன்ற குற்றங்களுக்கு 5 ஆண்டு சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

கடன் பெற்றவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் யாராவது தற்கொலை செய்து, அதற்கு கடன் வழங்கிய நிறுவனம் அல்லது முகவரின் வலுக்கட்டாய நடவடிக்கை காரணமாக இருந்தால், அது பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் 108-வது பிரிவின்கீழ் குற்றமாக கருதப்படும். மேலும், கடன் வழங்கும் நிறுவனம் பதிவு சான்றிதழ் பெறாமல் கடன் வழங்கினால், 3 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

இந்த மசோதா மீது கடந்த ஏப்ரல் மாதம் 29ம் தேதி சட்டப்பேரவையில் விவாதம் நடைபெற்றது. இறுதியில், தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்கள் சட்ட மசோதா உள்ளிட்ட 18 சட்ட மசோதாக்களும் பிரிவு வாரியாக ஆய்வு செய்யப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன. கவர்னருக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் இந்த கடன் ஒழுங்கு மசோதாவிற்கும் கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று ஒப்புதல் அளித்துள்ளார்.

### ஒரு பவுன் ரூ.74,360-க்கு விற்பனை:

# மீண்டும் புதிய உச்சம் தொட்ட தங்கம் விலை

சென்னை, ஜூன் 14-

**சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூன் 13) பவுனுக்கு ரூ.1,560 உயர்ந்து விற்பனையானது. இதனால் ஒரு பவுன் தங்கம் ரூ.74,360-க்கு விற்பனையானது. நேற்று முன்தினம் தங்கம் விலை பவுனுக்கு ரூ.640 உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.**

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

இந்நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூன் 13) கிராமுக்கு ரூ.195 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,295-க்கும், பவுனுக்கு ரூ.1,560 உயர்ந்து புதிய உச்சம் தொட்டு ஒரு பவுன் தங்கம் ரூ.74,360-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.120-க்கு விற்பனையானது.

### அதிகாலையில் தெஹ்ரானில் குண்டு மழை:

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்

தெஹ்ரான், ஜூன் 14-

**ஈரானுக்கு எதிராக அந்நாட்டின் ராணுவ தளங்கள் மற்றும் அணு சக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது. இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் நாட்டின் உச்ச தலைவரும், மதகுருவுமான அயதுல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார்.**

நேற்று ( ஜூன் 13) ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது வான்வழி தாக்குதலை தொடுத்தது இஸ்ரேல். இதில் தெஹ்ரான் நகரில் உள்ள குடியிருப்புகள் உட்பட பல்வேறு கட்டிடங்கள் சிதிலமடைந்தன. இந்த தாக்குதலை அடுத்து ஈரான் வான்வெளி மூடப்பட்டது. இதை ஈரான் நாட்டின் அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்தது.

வான்வழி தாக்குதல் மட்டுமல்லாது இஸ்ரேலின் மொஸாட் அமைப்பும் ஈரானில் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டதாக இஸ்ரேல் ராணுவ வானொலி தெரிவித்தது. இந்த தாக்குதலில் ஈரான் நாட்டின் ராணுவ தளபதிகள், வீரர்கள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர ராணுவ அதிகாரி ஹுசைன் சலாமி உயிரிழந்திருப்பதாவும் தகவல் வெளியாகி உள்ளது. இது மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்ட தாக்குதல் என சர்வதேச செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்கள் கூறியுள்ளன. அடுத்து என்ன செய்யலாம் என ஈரான் தரப்பில் முடிவெடுக்க கூடிய முக்கியஸ்தர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு என்ஐஏசி அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. அப்பாவி மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இதில் உயிரிழந்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. மேலும், இது அமெரிக்காவை உள்ளடக்கிய பெரிய அளவிலான போர் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்த தாக்குதலை தன்னிச்சையாக நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதை இஸ்ரேலின் ஐநா தூதர் டேனி டானன் கூறியுள்ளார். இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நடத்த உள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதலை அடுத்து இஸ்ரேலுக்கு தக்க பதிலடி தரப்படும் என ஈரானின் ஆயுதப்படைகளின் செய்தித் தொடர்பாளர் அபோல்பஸ்ல் ஷேகார்ச்சி கூறியுள்ளார். இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லாஅலி காமெனியின் ஆலோசகர் பலத்த காயமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.



அகமதாபாத்தில் விமான விபத்து நடந்த இடத்தில் பிரதமர் மோடி நேற்று பார்வையிட்ட காட்சி. அருகில் மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு உள்ளார்.

### அகமதாபாத் விமான விபத்து நடந்த பகுதியில்

# பிரதமர் மோடி நேரில் ஆய்வு; காயமடைந்தோருக்கு ஆறுதல்

அகமதாபாத், ஜூன் 14-

**அகமதாபாத் விமான விபத்துப் பகுதியை பிரதமர் நரேந்திர மோடி நேற்று (ஜூன் 13) காலை நேரில் ஆய்வு செய்தார். தொடர்ந்து அவர் விமான விபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். பேரழிவு நடந்த இடம் வருத்தமளிக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.**

முன்னதாக, நேற்று முன்தினம் (ஜூன் 12) குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து 242 பேருடன் லண்டன் செல்லும் ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த பயங்கர விபத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட விமானத்தில் சென்ற 241 பேர் உயிரிழந்தனர்.

தரையில் விழுந்த விமானம், மருத்துவக் கல்லூரி விடுதியில் மோதியதில், மருத்துவ மாணவர்கள் 10 பேரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். கல்லூரி மாணவர்கள் சிலர் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த இடத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

இதற்கிடையில், விமானத்தில் பயணம் செய்த 242 பேரில் உயிர் பிழைத்த பயணி விஷ்வாஸ் குமாரை பிரதமர் நரேந்திர மோடி சிவில் மருத்துவமனையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று (வெள்ளிக்கிழமை) காலை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். அவருடன் ராம் மோகன் நாயுடு, பூபேந்திர படேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர். விமானம் எவ்வாறு மோதியது என்பது தொடர்பாக ராம் மோகன் நாயுடு, பிரதமருக்கு விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, விமான விபத்தில் உயிர் பிழைத்த ஒரே பயணியான விஷ்வாஷ் குமார் ரமேஷை, மருத்துவமனைக்கு சென்று பிரதமர் மோடி நலம் விசாரித்தார். விபத்து தொடர்பாக அவர் கூறியதை கேட்டறிந்தார். மேலும், விமானம் மோதிய இடத்தில் இருந்ததால் காயமடைந்த மருத்துவக் கல்லூரி விடுதி மாணவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து ஆறுதல் கூறினார்.

விமான விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட பிறகு பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், அகமதாபாத்தில் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டேன். பேரழிவு நடந்த இடம் வருத்தமளிக்கிறது. விபத்துக்குப் பிறகு அயராது உழைக்கும் அதிகாரிகள் மற்றும் குழுக்களை சந்தித்தேன். கற்பனை செய்ய முடியாத இந்த துயரத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் எங்கள் எண்ணங்கள் தொடர்ந்து உள்ளன என தெரிவித்துள்ளார்.


பிரதமர் வெளியிட்ட மற்றொரு பதிவில், "அகமதாபாத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் நாங்கள் அனைவரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். இவ்வளவு திடீரெனவும், இதயத்தை உடைக்கும் வகையிலும் பல உயிர்களை இழந்தது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. அவர்களை இழந்து வாடும் அனைத்து குடும்பங்களுக்கும் இரங்கல். அவர்களின் வலியை நாங்கள் புரிந்து கொள்கிறோம், மேலும் அந்த வெற்றிடம் வரும் பல ஆண்டுகளுக்கும் நீடிக்கும் என்பதையும் அறிவோம். ஓம் சாந்தி என தெரிவித்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| - 573.38 | - 169.60 |
| பாயின்ட் 81,118.60 | பாயின்ட் 24,718.60 |



**தங்கம்**
1 சவரன் ₹74,360
1 கிராம் ₹9,295



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.14

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### அணுசக்தி ஒப்பந்த விவகாரம்:
# ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் இறுதி எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூன் 14-**

அமெரிக்காவுடன் அணு சக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு ஈரானுக்கு மீண்டும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார். அவர், 'ஒப்பந்தம் செய்யாவிட்டால் தாக்குதலால் நிலைமை மோசமாகும்' என்றும் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல், ஈரான் இடையே நேரடி போர் வெடித்து இருக்கிறது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டது. இதற்காக ஈரானை அமெரிக்காவும், இஸ்ரேலும் எச்சரித்து வந்தன. தற்போது, ஈரானின் முக்கியமான அணு ஆராய்ச்சி கூடங்கள், அன்டர் கிரவுன்ட் யுரேனியம் செறிவூட்டல் மையங்கள், ஏவுகணை ஏவுதளங்கள், ராணுவ தளங்களை குறி வைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின.

இந்நிலையில், அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு ஈரானுக்கு மீண்டும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கை: ஈரானுக்கு ஒரு ஒப்பந்தம் செய்ய வாய்ப்பு கொடுத்தேன். நான் அவர்களிடம், அதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினேன். ஆனால் எவ்வளவு கடினமாக முயற்சித்தாலும், எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும், அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. ஒப்பந்தம் செய்யாவிட்டால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்று நான் அவர்களிடம் சொன்னேன். உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த ராணுவ உபகரணங்களை அமெரிக்கா தயாரிக்கிறது. மேலும் இஸ்ரேலிடம் ஆயுதங்கள் நிறைய உள்ளது.

அதை எப்படி பயன்படுத்துவது என்பது அவர்களுக்குத் தெரியும். சில ஈரான் தலைவர்கள் துணிச்சலுடன் பேசினார்கள், ஆனால் என்ன நடக்கப் போகிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் இப்போது இறந்துவிட்டார்கள். எங்களுடன் ஒப்பந்தம் செய்யாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

# உயிர்வாழ்விற்கான போராட்டம்: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

**ஜெருசலேம், ஜூன் 14-**

எங்கள் உயிர்வாழ்விற்கான போராட்டம் என ஈரான் மீது தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஈரானில் இஸ்ரேல் வான் வழித் தாக்குதலை துவக்கியது. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தொடர்ந்து வெடிச்சத்தங்கள் கேட்கின்றன. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது: ஈரானில் 'ஆபரேஷன் ரைசிங் லயன்' என்ற ராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. இஸ்ரேலின் உயிர் வாழ்விற்காக ஈரானிய அச்சுறுத்தலை முறியடிக்க, ராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இந்த அச்சுறுத்தலை நீக்க, இந்த தாக்குதல் நடவடிக்கை எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தொடரும்.

மிகவும் குறுகிய காலத்தில் அணுகுண்டுகளை ஈரான் உருவாக்கிவிடும் அபாயம் உள்ளது. இது, இஸ்ரேல் நாட்டுக்கான மிகப்பெரிய அச்சுறுத்தல். எங்கள் நாட்டை அழிப்பதாக கூறுபவர்கள், அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதை இஸ்ரேல் ஒருபோதும் அனுமதிக்காது. இந்த நிலையை தடுத்து நிறுத்தி ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இஸ்ரேல் இப்போது தாக்குதலை தொடங்கியுள்ளது. இப்போது செயல்படவில்லை எனில் நாங்கள் இங்கே இருக்கமாட்டோம். இவ்வாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்து உள்ளார்.

### இஸ்ரேல் - ஈரான் மோதல்:
# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண இந்தியா வலியுறுத்தல்

**புதுடில்லி, ஜூன் 14-**

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நிலவும் பதற்றமான சூழலை தவிர்க்க, இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

காசாவைச் சேர்ந்த ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக தாக்குதல் நடத்தி வந்த ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக அணுசக்தி நிலைகளை குறி வைத்து சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் டிரோன் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளிடையே பதற்றம் நிலவி வருகிறது. இஸ்ரேலுக்கு ஈரான் விடுத்த அச்சுறுத்தல் நீங்கும் வரை தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே சமாதான முயற்சிகளை மேற்கொண்டு, இருநாடுகளிடையே நிலவும் பதற்றத்தை தணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஈரான் - இஸ்ரேல் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்கும் விதமாக, பேச்சுவார்த்தை உரையாடல் மற்றும் ராஜதந்திர வழிகளில் தீர்வு காண வலியுறுத்தப்பட்டுள்ளது. இரு நாடுகளும் பதற்றத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளையும் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, அணு ஆயுத தளங்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியாகும் செய்திகள் கவலை அளிக்கிறது. நிலைமையை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

ஈரான் - இஸ்ரேல் நாடுகளுடன் இந்தியா நெருக்கமான நட்புறவை கொண்டுள்ளது. இருநாடுகளுக்கும் தேவையான அனைத்து விதமான உதவிகளை செய்ய தயாராக இருக்கிறோம். இரு நாடுகளில் இருக்கும் இந்தியர்கள், உள்ளூர் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றி, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### விமான விபத்தில் மணிப்பூரை சேர்ந்த
# 2 விமான பணிப்பெண்கள் உள்பட 10 ஊழியர்கள் பலி

**குஜராத், ஜூன் 14-**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் காட்விக்கிற்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே மருத்துவமனை கட்டிட வளாகத்தில் விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்தார்.

விபத்தில் இரண்டு விமானிகள், 10 பணியாளர்களும் உயிரிழந்தனர். மணிப்பூரைச் சேர்ந்த இரண்டு விமான பணிப்பெண்கள் இதில் அடங்குவார்கள். அதில் ஒருவர் லாம்னுந்தெம் சிங்சன் என்ற 26 வயது பெண் ஆவார். மணிப்பூர் வன்முறையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில், இவருடைய ஒருவரின் வருமானத்தை வைத்துதான் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில்தான் இந்த துயர விபத்து ஏற்பட்டுள்ளது.

லாம்னுந்தெம் சிங்சன் உடன் பிறந்தவர்கள் 3 சகோதரர்கள். தந்தை இறந்த நிலையில் விதவை தாய் உடன் வாழ்ந்து வந்துள்ளார். மூத்த சகோதரர் நீண்ட நாள் நோய் காரணமாக வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். தாயும் எந்த வேலைக்கும் செல்லவில்லை. இரண்டு சகோதரர்கள் படித்து வருகிறார். இவரது வருமானத்தை வைத்தான் வாழ்ந்து வந்துள்ளனர். தனது தாயாரிடம் லண்டனுக்கு செல்ல இருக்கிறேன். அதனால் முன்னதாக தூங்கச் செல்கிறேன் என பேசியுள்ளார்.



அதன்பின்தான் இந்த துயர சம்பவம் நடைபெற்றுள்ளது. அவரது சகோதரர் நோயால் பாதிக்கப்பட்ட போதிலும் குஜராத் அகமதாபாத் விரைந்துள்ளார். அவரின் மற்றொரு சகோதரர் மற்றும் உறவினர் நாகலாந்து திமாபூர் சென்று அங்கிருந்து அகமதாபாத் செல்ல இருக்கிறார். இந்தச் செய்தியால் நாங்கள் மிகவும் மனமுடைந்து போனோம். விபத்து பற்றிய செய்திகள் வெளியானதிலிருந்து அவரது தாயார் அதிர்ச்சியில் இருக்கிறார், சாப்பிட மறுத்துவிட்டார் என அவரது உறவினர் கிப்ஜென் தெரிவித்துள்ளார். விமானப் பணிப்பெண்ணின் தாயாருக்கு போன் செய்த ஏர் இந்தியா அதிகாரிகள், உடல் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புக்குழு த.வெ.க. தலைவர் விஜய்யுடன் சந்திப்பு

**பரந்தூர், ஜூன் 14-**

பரந்தூர் மக்களை விஜய் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்த நிலையில் சந்தித்துள்ளனர்.

பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புக் குழு, சென்னை பனையூரில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜயுடன் சந்தித்துள்ளனர். பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கு விமான போக்குவரத்து அமைச்சகம் அண்மையில் அனுமதி அளித்தது. பரந்தூர் மக்களை விஜய் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்த நிலையில் நேற்று சந்தித்துள்ளனர். பரந்தூர் மக்களின் சந்திப்பு முடிந்த பிறகு, ஜாக்டோ- ஜியோ ஒரு பிரிவினரும் சந்திக்க உள்ளனர்.

### மீன்பிடி தடைக்காலம் இன்றுடன் முடிவு:
# கடலுக்கு செல்ல மீனவர்கள் ஆயத்தம்

**சென்னை, ஜூன் 14-**

மீன்பிடி தடைகாலம் முடிவுக்கு வருவதையொட்டி, கடலுக்கு செல்ல விசைப்படகு மீனவர்கள் தயாராகி வருகின்றனர்.

மீன்களின் இனப்பெருக்க காலமான ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க செல்லும் விசைப்படகுகளுக்கு தடைவிதிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், தமிழகத்தின் கிழக்கு கடல் பகுதியான வங்கக்கடலில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 14-ந் தேதி நள்ளிரவு முதல் ஜூன் 14-ந் தேதி நள்ளிரவு வரை 61 நாட்கள் விசைப்படகுகள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவது இல்லை. இதனால், திருவள்ளூர், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்பட 12 மாவட்டங்களில் 6,700 விசைப்படகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையில் ஓய்வெடுத்து வந்தன.


மீன்பிடி தடைக்காலமான இந்த 61 நாட்களும் விசைப்படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளில் உள்ள பழுதுகளை சரிசெய்யும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டனர். இந்த நிலையில், இன்று (சனிக்கிழமை) நள்ளிரவு 12 மணி முதல் மீண்டும் வங்கக் கடலில் மீன்பிடிக்க செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், விசைப்படகு மீனவர்கள் மீண்டும் தொழிலுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றனர்.

பொதுவாக, கடலில் குறைந்த தூரத்திற்கு கட்டுமரம், பைபர் படகுகளில் சென்று மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள், குடிக்க தண்ணீர் மட்டுமே கூடுதலாக எடுத்துச் செல்வார்கள். ஆனால், ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க செல்லும்போது, ஒரு வாரத்திற்கு தேவையான அனைத்தையும் விசைப்படகுகளில் மீனவர்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.

அந்த வகையில், மீண்டும் மீன்பிடிக்க செல்ல இன்று ஒருநாள் மட்டுமே இருப்பதால், விசைப்படகுகளில் மீன்களை பதப்படுத்தி வைக்கும் கீழ் அறைகளில் ஐஸ் கட்டிகளை நிரப்பி வைப்பது, தேவையான அளவு குடிநீர் கேன்களை வாங்குவது, படகுகளிலேயே உணவு சமைக்க தேவையான பொருட்களை எடுத்துச்செல்வது போன்ற பணிகளில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகம் பரபரப்பாக காணப்படுகிறது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

**14-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்று பணவரவு கூடும். தொழில், வியாபாரம் எப்போதும் போல் மாற்றமின்றி ஓடும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம். அதிகாரிகள் பாராட்டு பெருமை சேர்க்கும்.

**ரிஷபம்:-** தெய்வீக காரியங்களில் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். தீர்த்த யாத்திரை சென்று புண்ணியத்தை தேடிக் கொள்வார்கள். அதிகாரப் பதவிகள் கிடைக்க பெற்று உங்கள் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்:-** கடின உழைப்பின் காரணமாக சரியான நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்கினால் முன்னேற்றம் உண்டு. தேவையற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்:-** இன்று, அதிக தனலாபம் எதிர்பார்க்கலாம். வெற்றி மேல் வெற்றி ஏற்படும். புதிய நண்பர்கள் தொடர்பு, எதிர் பாலர் பால் ஈர்ப்பு ஏற்படும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும்.

**சிம்மம்:-** தனவரவு மேம்பட்டு பொருளாதார நிலை சீர்படும். இனிய சுற்றுலாப் பயணங்களின் இன்பம் பெருகும். எதிரிகள் பயந்து, பணிந்து சரணடைவர். எடுத்த காரியங்கள் யாவும் எளிதில் வெற்றி பெறும்.

**கன்னி:-** தேவையற்ற பண விரயங்கள் ஏற்படும். பிள்ளைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. மதிப்பு மரியாதை ஆகியவை குறையும். சிலருக்கு மன அமைதி குறையும். ஆயினும் தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**துலாம்:-** அன்புத் தாயின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுது காரணமாக பயண சுகம் குறையும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:-** தனலாபம் பெருகும். குடும்ப ஆரோக்கியம் மேம்பாடு அடையும். நிம்மதியான படுக்கை சுகம் ஏற்படும். புதிய நண்பர்கள் சந்திப்பு நலம் தரும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:-** எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படும். சுமாரான பணவரவு உள்ள நாள். ஆயினும் மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வெட்டி செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:-** நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மனநிம்மதி கூடும். பலவகைகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

**கும்பம்:-** எதிர்பாராத வகையில் செலவுகள், மற்றும் தேவையற்ற அவமானங்கள் ஏற்படும். வீண் பண இழப்பை தவிர்க்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**மீனம்:-** இன்று, உறவுகளைச் சந்திப்பதால் மனமகிழ்ச்சி ஏற்படும். நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் உண்டு. படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்.

### தற்போது மதுரை மாநகரம் அழகாக காட்சியளிக்க
# அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங்கள்தான் காரணம்
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பெருமிதம்

**மதுரை, ஜூன் 14-**

மதுரையே அழகாக காட்சியளிக்க காரணம்.அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டபல்வேறு திட்டங்கள் தான் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.



மதுரை அச்சம்பத்து பகுதியில் உள்ள மாரியம்மன் மந்தை திடலில் மேற்கு சட்டமன்றத் தொகுதி நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பில் சந்தன மாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜை செய்த பின்பு மேற்கூரை அமைப்பதற்கான பூமி பூஜையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் ஜெயந்திராஜூ மற்றும் நிர்வாகிகள் வில்லாபுரம் ஜெ.ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கு.திரவியம், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், கே.ஜெயவேல், மார்க்கெட் மார்நாடு, கார்னர் பாஸ்கர், மதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

இந்தியாவில் அகமதாபாத்தில் விமான விபத்து நடந்ததற்கு அனைவரும் வேதனையில் உள்ளோம்.விமான விபத்து நடந்ததற்கு அதிர்ச்சியில் உறைந்துள்ளோம். இறந்தவர்களின் குடும்பத்திற்கு எங்களது ஆழ்ந்த வருத்தத்தை, இரங்கலை தெரிவித்து கொள்கிறோம். பாஜக, அதிமுக கூட்டணி குறித்த கேள்விகளை எங்களது பொது செயலாளரிடம் கேளுங்கள். கூட்டணி குறித்து எங்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தாமல்., அமித்ஷா-விடம் பேசியதும், கூட்டணி குறித்தும் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெளிவாக பேசியுள்ளார்.

ஒரு முன்னாள் அமைச்சரை தருகுறைவாகவும்., அதனை கேட்பவரின் காதுகள் கூசும் அளவிற்கு முதல்வர் பேசியிருக்கிறார். முதல்வர் ஸ்டாலின் மீது மக்களிடத்தில் மதிப்பு மரியாதை இல்லை.இந்த ஆட்சியில் மக்கள் பயந்து போய் உள்ளார்கள். பொதுவிழாவில் ஒரு முதல்வர் தகுதியற்ற முறையில் பேசியது வன்மையாக கண்டிக்கக் கூடியது. எடப்பாடியார் மீது நாளுக்கு நாள் புகழும் மக்கள் செல்வாக்கும் இருப்பதால் முதல்வர் ஸ்டாலின் இதுபோன்று பேசி வருகிறார்.

மதுரையே அழகாக காட்சியளிக்க காரணம் அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களும்., 8000 கோடி ரூபாய் வரை நிதி ஒதுக்கீடு செய்ததால் தான். அமைச்சர் மூர்த்தி மேற்கு தொகுதியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து நாங்கள் கவலைப்படுவதே இல்லை. மக்களுக்கு தெரியும். அதிமுக ஆட்சியில் நாங்கள் என்ன செய்தோம் என்பது மக்களுக்கு தெரியும் என்றார். மேலும் மத்திய அரசின் திட்டங்களுக்கு தான் திமுக அரசு தனது லேபிள் ஒட்டுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### அகமதாபாத்தில் பலியானவர்களுக்கு
# த.வெ.க. சார்பில் மவுன அஞ்சலி



**மாமல்லபுரம், ஜூன் 14-**

அகமதாபாத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகம் சார்பாக கடந்த 2 ஆண்டுகளாக 10 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. அரசியலுக்கு வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக நடிகர் விஜய் இந்த பணிகளை தொடங்கினார். தற்போது தொடர்ந்து 3-ம் ஆண்டாக மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்து வருகிறது.

ஒவ்வொரு தொகுதிக்கும் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கம் மற்றும் விருது அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கு தங்கம் மற்றும் வைரத்தில் பரிசு அளிக்கப்படுகிறது. நடப்பாண்டில் ஏற்கனவே 2 கட்டங்களாக பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரத்தில் கடந்த மே 30ம் தேதி 88 தொகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு முதற்கட்டமாக பரிசு அளிக்கப்பட்டது. இதன்பின் ஜூன் 4ஆம் தேதி 84 தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு பரிசு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் 3வது கட்டமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 51 தொகுதிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் நேரடியாக பங்கேற்று மாணவர்களுக்கு பரிசை வழங்கி வருகிறார். முன்னதாக கல்வி விருது விழா தொடங்குவதற்கு முன்னர் அகமதாபாத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேசிய த.வெ.க. தலைவர் விஜய், "குஜராத் ஆகமதாபாத்தில் விமானம் விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது. சில வீடியோக்கள், போட்டோக்களை பார்க்கும் போது மனம் பதறுகிறது.. அடுத்த நொடி நிச்சயமில்லாத வாழ்க்கை" என்று கூறினார்.

# தமிழ்நாடு மக்கள் உரிமை மீட்பு பயணம்: அன்புமணி அறிவிப்பு

**சென்னை, ஜூன் 14-**

ஜூலை 25ம் தேதி முதல் 100 நாட்களுக்கு தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணம் மேற்கொள்ள இருப்பதாக, பா.ம.க., செயல் தலைவர் அன்புமணி அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழக மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதை விட, நல்லாட்சி வழங்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதில் தான் தமிழக அரசு தீவிரம் காட்டி வருகிறது. தமிழக மக்கள் அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்படுவதாகவும், அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பது போன்றும் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தான் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது.

தமிழக அரசு ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கான அதன் கடமையை தட்டிக்கழித்துக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு எதிரான பிற வன்முறைகளும் தலைவிரித்து ஆடுகின்றன. கல்வி சேவையாக இருந்த நிலை மாறி கொள்ளையாக மாறிவிட்டது. மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டம் தான் அனைத்து வகையான சமூகக் கேடுகளுக்கும் காரணமாக இருக்கிறது என்று தெரிந்தும் கூட அவற்றைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஜூலை 25ம் தேதி முதல் 100 நாட்களுக்கு தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணம் மேற்கொள்கிறோம். இந்த பயணம் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் தொடங்கவுள்ளது. தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் ஓர் அரசியல் கட்சிக்கானது அல்ல. தமிழக மக்களின் நலனுக்கானது. எனவே. உன்னத நோக்கம் கொண்ட இந்தப் பயணத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பெருமளவில் பங்கேற்று ஆதரவளிக்க வேண்டும்.

இவ்வாறு ராமதாஸ் கூறியுள்ளார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# தமிழகத்தில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகக்குறைவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, ஜூன் 14-**

குழந்தைகள் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் விரைவான விசாரணை, அதிகபட்ச தண்டனை, முன்விடுதலை இல்லை என்பதே நமது அரசின் பாலிசி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். மேலும் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான



குற்றச் சம்பவங்கள் தமிழகத்தில் மிகக் குறைவு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், "தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை பெருகிவிட்டதாகப் பரப்பப்படும் அடிப்படையற்ற விஷமப் பிரசாரங்களுக்கு பதிலடி தரும் வகையில் அமைந்துள்ள தமிழ்நாடு டிஜிபி-யின் நேர்காணலைப் பகிர்கிறேன். என்சிஆர்பி தரவுகளின்படி குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகவும் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருக்கிறது.

அதேநேரம், போக்சோ குற்றங்களை எந்தவித அச்சமும் இல்லாமல், காவல்நிலையத்தில் நம்பிக்கையோடு புகாரளிக்கும் விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.

அச்சமின்றிப் புகாரளித்தால்தான், குற்றவாளியை முதல் குற்றத்தின்போதே கைதுசெய்து தண்டனை பெற்றுத்தரமுடியும்.

இத்தகைய நபர்கள் மேலும் குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க இது மிக அவசியம்.

ஏற்கெனவே நான் கூறியது போல, குழந்தைகள் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் விரைவான விசாரணை, அதிகபட்ச தண்டனை, முன்விடுதலை இல்லை என்பதே நமது அரசின் பாலிசி," என்று முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# என்னுடைய மூச்சுக்காற்று இருக்கும் வரை நானே பா.ம.க.வின் தலைவர்

## ராமதாஸ் மீண்டும் திட்டவட்டம்

**தைலாபுரம், ஜூன் 14-**

தன்னுடைய மூச்சுக்காற்று அடங்கும் வரை தலைவர் பதவியை அன்புமணிக்கு கொடுக்கமாட்டேன், என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள தைலாபுரம் தோட்டத்தில், நேற்று (ஜூன் 13) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: " 2026 தேர்தலுக்குப் பிறகு வேண்டும் என்றால், அன்புமணிக்கு தலைவர் பதவியைக் கொடுப்பதாக கூறினேன். ஆனால், நடப்பதை எல்லாம் பார்க்கும்போதும், அவருடைய செயல்பாடுகளை பார்க்கும்போது, என்னுடைய மூச்சுக்காற்று அடங்கும் வரை, அந்தப் பதவியை நான் கொடுக்கமாட்டேன். ஆனாலும் இந்த கட்சியை கொஞ்சம்கூட தொய்வில்லாமல் நடத்த எனக்கு ஆதரவு வருகிறது.

எனவே, தொண்டர்களின் விருப்பத்துக்கு ஏற்ப கூறுகிறேன், என்னுடைய மூச்சுக்காற்று இருக்கும் வரை பா.ம.க. தலைவர் பதவியில் இருப்பேன். நான் கட்சி ஆரம்பிக்கும் போது, எனது குடும்பத்தினர் பதவிக்கு வரமாட்டார்கள் என்று கூறியிருந்தேன். ஆனால், அதை காப்பாற்ற முடியவில்லை. தலித் எழில்மலை, பொன்னுசாமி ஆகியோருக்கு பதவியை கொடுத்தபோது, அவர்களுடைய செயல்பாடுகள் மனதுக்கு திருப்தியாக இல்லாத நிலையில், கட்சியின் மூத்த தலைவர்கள் கோரிக்கையின்படி 35 வயதில் அன்புமணிக்கு மத்திய அமைச்சர் பொறுப்பை கொடுத்தேன்." என்று அவர் கூறினார்.

### உயிர் பிழைத்தது எப்படி?

# விமான விபத்தில் தப்பித்த விஷ்வாஸ் குமார் பேட்டி

**அகமதாபாத், ஜூன் 14-**

உயிர் தப்பியது எப்படி என விமான விபத்தில் தப்பித்த ஒற்றை நபரான விஸ்வாஸ் குமார் பேட்டியளித்தார்.



விமான விபத்து நிகழ்ந்த இடத்தை நேரில் பார்வையிட்ட பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் விபத்தில் உயிர் தப்பிய விஷ்வாஸ், விமானம் மோதிய இடத்தில் இருந்ததால் காயமடைந்த மருத்துவக் கல்லூரி விடுதி மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பிரதமர் மோடி நலம் விசாரித்துவிட்டுச் சென்ற பிறகு விஷ்வாஸ், பேட்டி அளித்தார். "விமானம் புறப்பட்ட பிறகு, 5-10 வினாடிகளில் அனைத்தும் சிக்கிக் கொண்டது போல் நாங்கள் உணர்ந்தோம். விமானத்தில் பச்சை மற்றும் வெள்ளை விளக்குகள் இயக்கப்பட்டன. புறப்படுவதற்காக விமானத்தின் வேகம் அதிகரிக்கப்பட்டதாக நான் நினைத்தேன். அது கட்டிடத்தில் மோதியது. இதெல்லாம் என் கண் முன்னே நடந்தது.

நான் அமர்ந்திருந்த இடம் விமானம் மோதிய விடுதி பக்கத்தில் இல்லை. சிறிது இடம் இருந்தது. என் கதவு உடைந்தவுடன், கொஞ்சம் இடம் இருப்பதைக் கண்டேன், பின்னர் நான் வெளியேற முயற்சித்தேன், நான் வெளியே வந்தேன். நான் எப்படி உயிர் பிழைத்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த சம்பவம் குறித்து பிரதமர் மோடி என்னிடம் கேட்டார். இதெல்லாம் என் கண் முன்னே நடந்தது. நான் எப்படி காப்பாற்றப்பட்டேன் என்று என்னால் நம்பவே முடியவில்லை" என விஷ்வாஸ் குமார் ரமேஷ் தெரிவித்தார்.

# மனு வாங்கி குறைகளை நிவர்த்தி செய்வதே ஆட்சியாளர்கள் கடமை

## எடப்பாடி பழனிசாமி அறிக்கை

**சென்னை, ஜூன் 14-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது., அ.தி.மு.க. ஆட்சியில் மக்களின் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டன. ஆனால், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எதிர்க்கட்சி தலைவராக, தமிழகம் முழுவதும் பெட்டிகளை வைத்து மனுக்களை வாங்கினார் ஸ்டாலின். இன்றுவரை அந்த பெட்டிகள் திறக்கப்பட்டதா, எத்தனை லட்சம் மனுக்கள் பெறப்பட்டன, அந்த கோரிக்கைகள் உண்மையாக தீர்க்கப்பட்டனவா என்று எழுப்பிய கேள்விகளுக்கு புள்ளி விவரங்களை ஆட்சியாளர்கள் இதுவரை வெளியிடவில்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் பொதுமக்களிடம் மனுக்களை பெறுவதற்குக்கூட – 'முதல்வரின் முகவரித்துறை', 'உங்கள் தொகுதியில் முதல்வர்', 'மக்களுடன் முதல்வர்', 'நீங்கள் நலமா?', 'மக்களுடன் முதல்வர் – நகரம் மற்றும் ஊரகம்' 'மக்களுடன் முதல்வர் – பட்டியலினத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர்' என்று பல்வேறு பெயர்களை சூட்டி தமிழக மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகிறது. ஆனால், மக்களிடம் மனு வாங்கி அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதுதான் ஒரு ஆட்சியின் கடமை.



இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அகமதாபாத் விமான விபத்து: 6 பேரின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

**அகமதாபாத், ஜூன் 14-**

ஏர் இந்தியா விமான விபத்தில் உயிரிழந்த 6 பேரின் உடல்கள், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அகமதாபாத் சிவில் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

அகமதாபாத்தில் இருந்து பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு நேற்று புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். விஷ்வாஸ் குமார் ரமேஷ் என்ற ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்தார். உயிரிழந்த பயணிகள் மற்றும் மற்றவர்களின் உடல்கள் அகமதாபாத் சிவில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன.

இந்நிலையில், 6 பேரின் முகம் அப்படியே இருந்ததால், அந்த உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பிரதே பரிசோதனை நடைமுறைகளை கையாளும் ஆய்வாளர் சிராக் கோசாய் தெரிவித்துள்ளார். மேலும் அவர், "வியாழக்கிழமை விபத்துக்குப் பிறகு குறைந்தது 265 உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அகமதாபாத் சிவில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன. இவற்றில், ஆறு பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டனர். மற்றவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகிவிட்டதால், அவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்த டி.என்.ஏ. விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இறந்த 215 பேரின் உறவினர்கள் தங்கள் மாதிரிகளை வழங்க எங்களை அணுகியுள்ளனர். டி.என்.ஏ மாதிரிகளைப் பொருத்தும் பணியை முடிக்க கிட்டத்தட்ட 72 மணிநேரம் ஆகும். பொருத்தம் ஏற்பட்டவுடன், உடல்கள் பிரேத பரிசோதனை அறையில் இருந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்" என்று தெரிவித்தார். இந்த விபத்தில், குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட 241 விமானப் பயணிகள் உயிரிழந்தனர். அதோடு, விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் இருந்த பலரும் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 3-ம் கட்டமாக விருது வழங்கும் விழா:

# இளைய காமராஜர் என்று அழைக்க வேண்டாம்: விஜய் வேண்டுகோள்



**சென்னை, ஜூன் 14-**

தன்னை காமராஜர், இளைய காமராஜர் என்றெல்லாம் அழைக்க வேண்டாம் என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னை அடுத்த மாமல்லபுரத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) 10, 12-ம் வகுப்புகளில் சிறந்த மதிப்பெண்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு 3-ம் கட்டமாக விருது வழங்கி த.வெ.க. தலைவர் விஜய் கவுரவித்தார்.

விருது வழங்கும் விழாவில் நடிகர் விஜய் பேசுகையில், குஜராத்தில் ஒரு மிகப் பெரிய, சோகமான விமான விபத்து நடந்துள்ளது. விபத்து நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட சில வீடியோக்கள், புகைப்படங்களைப் பார்க்கும் போது மனம் பதறுகிறது. அடுத்த நொடி நிச்சயம் இல்லாத வாழ்க்கை. இறந்தவர்களுக்காக 2 நிமிடம் மவுனம் அஞ்சலி செலுத்துவோம். 2026-ம் ஆண்டு தேர்தல் பற்றி பேசாதீர்கள். என்னை காமராஜர், இளைய காமராஜர் அப்படி எல்லாம் ஏதும் சொல்லாதீர்கள். நீங்கள் உங்களுடைய ஆசிரியர்கள், உங்கள் பள்ளி பற்றி பேசுங்கள். மற்ற விஷயங்கள் பற்றி பேசுங்கள்." என்றார்.

முன்னர் நடந்த விருது நிகழ்ச்சியின் போது மாணவர் ஒருவரின் தந்தை விஜய்யை 'இளைய காமராஜர்' எனப் பாராட்டியது சர்ச்சையைக் கிளப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், பலரும் 2026 தேர்தலில் விஜய் வென்று முதல்வராக வேண்டும் என்றும் பேசியிருந்தனர். இதனையடுத்தே விஜய் தனது வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

# விமான விபத்தில் பலியானவர்கள் குறித்து வெளியான நெஞ்சை உருக்கும் தகவல்கள்

**ராஜ்கோட், ஜூன் 14-**

குஜராத்தில் நடந்த விமான விபத்தில் சிக்கி பலியானவர்கள் தொடர்பான பலரது நிலை குறித்து நெஞ்சை உருக்கும் தகவல்கள் வெளியாகி வருகிறது.



நேற்று முன்தினம் (ஜூன்-12)ல் ஆமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கி சென்ற விமானம் சில நிமிடங்கிளில் பூமியை நோக்கி விழுந்து தீப்பற்றி எரிந்தது. இதில் 240- க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில் லண்டன் நோக்கி சென்ற ஒவ்வொரு பயணிகளும் ஒவ்வொரு கனவுகளுடன், பல கடமைகளை சுமந்து சென்றனர். ஆனால் துரதிருஷ்டமாக விபத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி பா.ஜ., வில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். லண்டனில் இருக்கும் மகள் வீட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

இவர் எப்போதும் தனது விலை உயர்ந்த கார்களுக்கு 1206 என்ற நம்பரையே வாங்குவார். இந்த நம்பரை சொன்னாலே இது ரூபானி வாகனம் என தெரிந்து விடும். இவரது இறுதிநாளும் இந்த நம்பரிலேயே முடிந்தது. அதாவது (ஜூன்12) 12.06.2025. இதுவும் அவரது சொந்த ஊரான ராஜ்காட்டில் பரபரப்பாக பேசப்படுகிறது.

ராஜஸ்தானின் பன்ஸ்வாராவை சேர்ந்த பெண் மருத்துவர் கோமி வியாஸ் . இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மருத்துவமனைக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். அதில் 'நான் என் வேலையை விட்டு விலகுகிறேன், நான் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்க விரும்புகிறேன்' என்று கூறியிருந்தார். லண்டன் பயணத்தை மேற்கோள் காட்டி இவ்வாறு கூறியிருந்தார்.

ஆனால் டாக்டரும் அவரது கணவர் பிரதீக் , 3 குழந்தைகள் விமான விபத்தில் சாம்பலானார்கள்.

புதிய வாழ்க்கை என்று கூறியது அவரது வாழ்வின் இறுதி நாளாக மாறிப்போனது. கனவுகள் நிறைந்த ஒரு முழு குடும்பத்தையும் ஒரே நொடியில் அழித்துவிட்டது.

விபத்துக்கு மத்தியில், ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

விமானத்தின் இடிபாடுகளில் இருந்து 'பகவத் கீதை' புத்தகம் எவ்வித சேதமும் இல்லாமல் அப்படியே இருந்தது. இது விமானத்தின் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டது.

ராஜஸ்தானைச் சேர்ந்தவரும், தற்போது குஜராத்தின் ஹிம்மத்நகரில் பணியாற்றி வரும் ஒரு குடும்பத்தின் மகள் பாயல். பாயலின் தந்தை சுரேஷ்பாய் காதிக், இவர் ஒரு ரிக்ஷா வண்டி ஓட்டுபவர். இவர் தனது மகளுக்கு கஷ்டத்திலும் பல லட்சம் செலவில் கல்வி கற்க வைத்தார். இவரும் தனது ஏழ்மை நிலையை அறிந்து கடுமையாக உழைத்தார். இவர் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அந்த நிறுவனத்தின் சார்பாக அவரை லண்டனுக்கு அனுப்ப இந்நிறுவனம் முடிவு செய்தது. இவர் முதல் முறையாக விமானத்தில் பயணம் என்ற கனவுடன் ஏறினார். ஆனால் சில நிமிடங்களில் விபத்தில் நிலை குலைந்தார். ராஜஸ்தானின் பனஸ்கந்தா மாவட்டத்தின் தானேரா தாலுகாவைச் சேர்ந்த புதுமணத் தம்பதிகள் கமலேஷ்பாய், தபுபென் இவர்கள் லண்டனுக்கு சென்று, திரும்பும் கனவில் இருவரும் உயிரிழந்தனர்.

# `தக் லைப்' பட விவகாரம்: கர்நாடக அரசுக்கு சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ்

**புதுடெல்லி, ஜூன் 14-**

`தக் லைப்' திரைப்படத்தை கர்நாடகத்தில் திரையிட விதித்த தடையை எதி ர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவுக்கு பதில் அளிக்க கர்நாடக அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது


மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் உருவான படம் 'தக் லைப்'. இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. அதில் பேசிய கமல்ஹாசன், கன்னட நடிகர் சிவராஜ்குமாரை பார்த்து, 'தமிழில் இருந்து பிறந்ததுதான் உங்கள் கன்னட மொழி' என்றார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கமல்ஹாசனை கண்டித்து கன்னட அமைப்பினர் தீவிர போராட்டங்களை நடத்தினர். அதனை தொடர்ந்து, கமல்ஹாசன் மன்னிப்பு கோரினால் மட்டுமே கர்நாடாகாவில் 'தக் லைப்' படத்தை திரையிடுவோம் என்று கன்னட சினிமா வர்த்தக சபை கூறியது. கமல்ஹாசன் மன்னிப்பு கேட்காத நிலையில் 'தக் லைப்' படம் அங்கு வெளியாக தடை விதிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து, `தக் லைஃப்' திரைப்படத்தை கர்நாடகத்தில் திரையிட விதித்த தடையை எதிர்த்து ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தநிலையில், அதற்கு பதில் அளிக்க கர்நாடக அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது

### கடவுள்தான் காப்பாற்றினார்:

# விமானத்தை தவறவிட்ட குஜராத் பெண் நெகிழ்ச்சி

**அகமதாபாத், ஜூன் 14-**

விபத்தில் சிக்கிய ஏர் இந்தியா விமானத்தில் பயணித்திருக்க வேண்டிய பூமி சவுகான், 10 நிமிட தாமதத்தால் விமானத்தை தவறவிட்டார். கணபதி (விநாயகப் பெருமான்) தான் தன்னை காப்பாற்றியதாக குரல் நடுநடுங்கக் கூறுகிறார்.



அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் (ஜூன் 12) மதியம் லண்டனுக்குப் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் பயணித்திருக்க வேண்டிய வாய்ப்பை தவற விட்டதால் பூமி சவுகான் என்பவர் உயிர் பிழைத்திருக்கிறார்.

குஜராத்தின் பரூச் நகரைச் சேர்ந்த பூமி சவுகான், லண்டனில் கணவர் மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறார். பெற்றோரைப் பார்ப்பதற்காக இந்தியா வந்த பூமி சவுகான், நேற்று முன்தினம் ஏர் இந்தியா விமானத்தில் லண்டனுக்குப் பயணிக்க டிக்கெட் எடுத்திருந்தார். விமான நிலையத்துக்குச் செல்ல அவர் புறப்பட்ட போது அகமதாபாத்தில் நிலவிய போக்குவரத்து நெரிசலால் 10 நிமிடம் தாமதமாகி விட்டது. அந்த விமானத்தில் சென்றே ஆக வேண்டும் என்பதற்காக அதிகாரிகளுடன் அவர் எவ்வளவோ பேசிப் பார்த்துள்ளார். எனினும், விமான நிலைய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் தெரிவித்த பூமி சவுகான், "நான் 10 நிமிடத்தில் விமானத்தைத் தவறவிட்டேன். நான் கெஞ்சினேன், ஆனால் அவர்கள் என்னை ஏற அனுமதிக்கவில்லை. நான் மதியம் 1:30 மணியளவில் விமான நிலையத்தை விட்டு வெளியேறினேன். விமானம் சுமார் 1:38 மணியளவில் புறப்பட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு அது விபத்துக்குள்ளானது. நான் என்ன உணர்கிறேன் என்பதை எப்படி விளக்குவது என்று எனக்குத் தெரியவில்லை.

கடவுளுக்கு நன்றி. என் கணபதி என்னைக் காப்பாற்றிவிட்டார். என் உடல் உண்மையில் நடுங்குகிறது. என்னால் பேச முடியவில்லை. நடந்த அனைத்தையும் கேட்ட பிறகு என் மனம் இப்போது முற்றிலும் வெறுமையாக உள்ளது. இழப்பைப் பற்றி கேள்விப்பட்ட பிறகு நான் முற்றிலும் மனமுடைந்து போனேன். ஏதோ காரணத்திற்காக, கடவுள் கணபதி என்னை காப்பாற்றி விட்டார். நான் ஏன் காப்பாற்றப்பட்டேன் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னைக் காப்பாற்றியவர்களை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்." என தெரிவித்தார்.

# எட்டயபுரம் அருகே விபத்து: 4 பேர் மரணம்; நீதிபதி படுகாயம்

**கோவில்பட்டி, ஜூன் 14-**

எட்டயபுரம் அருகே மேலக்கரந்தை பகுதியில் நடந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

தஞ்சாவூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி பூரண ஜெய ஆனந்த் (55). இவர் திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்வதற்காக காரில் வந்திருந்தார். அவருடன் அவரது பாதுகாவலர் நவீன்குமார், வழக்கறிஞர் தனஜெயன் ராமமூர்த்தி, நீதிமன்ற பணியாளர் ஸ்ரீதர் குமார் (37), நீதிமன்ற உதவியாளர் உதயசூரியன் ஆகியோர் வந்தனர். காரை நீதிமன்ற பதிவு எழுத்தர் வாசுராமநாதன் என்பவர் ஓட்டினார்.

சாமி தரிசனம் முடித்துவிட்டு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மீண்டும் ஊருக்கு புறப்பட்டனர். காலை சுமார் 9 மணி அளவில், மேலக்கரந்தையை கடந்த போது முன்னால் சென்ற லாரி மீது எதிர்பாராத விதமாக கார் மோதியது. இதில், நீதிமன்ற பணியாளர்கள் ஸ்ரீதர் குமார், வாசு ராமநாதன், பாதுகாவலர் நவீன்குமார், வழக்கறிஞர் தனஜெயன் ராமமூர்த்தி ஆகிய 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.


நீதிபதி பூரண ஜெய ஆனந்த், நீதிமன்ற பணியாளர் உதயசூரியன் ஆகியோர் காயமடைந்தனர்.

தகவல் அறிந்து அங்கு சென்ற மாசார்பட்டி போலீஸார் இறந்தவர்களின் சடலங்களை மீட்டு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்த நீதிபதி மற்றும் நீதிமன்ற பணியாளரை மீட்டு சிகிச்சைக்காக அருப்புக்கோட்டைக்கு அ னுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீஸார் வழக்கு பதிந்து, லாரி ஓட்டுநர் கடலூர் மாவட்டம் பொம்மரக்குடியை சேர்ந்த விஜயராஜ் (27) என்பவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்தியாவில் பல மாநிலங்களில் கள் இறக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் மட்டும் அனுமதில்லை. வருங்கால சந்ததியரும் பனை பொருட்களையும், அதன் நன்மைகளையும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, அதை பாதுகாக்கும் வகையில் போராட்டத்தை நடத்துகிறேன்.

- சீமான்




அமித்ஷா உள்ளிட்டவர்கள் மூலமாக எத்தகைய உத்திகளை கையாண்டாலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்ற முடியாது. தி.மு.க. கூட்டணி அனைத்து தேர்தல்களிலும் அமோக வெற்றி பெற்று வருவதை சகித்துக் கொள்ள முடியாத அண்ணாமலை போன்ற காழ்ப்புணர்ச்சியாளர்கள் தமிழக அரசு மீது சேற்றை வாரி இறைக்கிறார்கள்.

- செல்வப்பெருந்தகை



உலகத்தில் ஊழலற்ற ஆட்சி என்பது எங்கும் கிடையாது. ஆட்சி அதிகாரம் இருக்கும் இடத்தில் ஊழல் இருக்கும். அதைக் கூறி ஒரு ஆட்சியை வீழ்த்த முடியாது. ஊழல் மிகப் பெரிய பிரச்சனைதான் அதை விட மேலான பிரச்சனைகள் உள்ளன. ஊழலை விட மதவாத, சாதியவாதம் தீங்கானது. அதைத்தான் முதலில் வீழ்த்த வேண்டும்.

- திருமாவளவன்



1950-களில் நடந்த ரயில் விபத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று லால் பகதூர் சாஸ்திரி ராஜினாமா செய்தார். அதேபோல் குஜராத் விமான விபத்திற்கு பொறுப்பேற்று பிரதமர் மோடி, அமித்ஷா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு ஆகியோர் ராஜினாமா செய்ய வேண்டும்.

- சுப்பிரமணியன் சுவாமி

# ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா



ஈரோடு ஜூன் 14-

ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (சுய நிதிப்பிரிவு) இளங்கலை முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க நடைபெற்றது. விழா

முதலியார் கல்வி அறக்கட்டளை தலைவர் வி.ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். செயலர் மற்றும் தாளாளர் கே.கே.பாலுசாமி முன்னிலை உரையாற்றினார். இயக்குநர் முனைவர் இரா. வெங்கடாசலம் வரவேற்றார். முதல்வர் வாழ்த்துரை வழங்கினார். முனைவர். இரா.சங்கரசுப்ரமணியன் திரைப்பட இயக்குனர். நடிகர் கரு.பழனியப்பன் "ஆண்களுக்கு இணையாக பெண்கல்வி உயரட்டும்" என்றும் "உனக்கு பிடித்ததை செய்தால் வாழ்வில் வெற்றியடையலாம் எனவும், மேற்படிப்பு படித்து வேலைக்கு சென்று சம்பாரித்து கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக, வணிகவியல் துறை தலைவர் முனைவர். பூ. இளம்பரிதி நன்றி கூறினார்.



**நீலகிரி மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விஸ்வநாதன் மாவட்ட அதிமுக செயலாளர் கப்பச்சி வினோத்திற்கு சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். உடன் அமைப்புச் செயலாளர் கே ஆர் அர்ஜுனன், பேரவை மாவட்ட செயலாளர் சாந்தி ராமு உட்பட பலர் உள்ளனர்.**

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக

# விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி மலர் தூவி மவுன அஞ்சலி



ஈரோடு ஜூன் 14 -

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி மலர் தூவி மவுன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நேற்று. டி ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வம் தலைமையில் நடைபெற்றது

ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு பிரபு தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் ஆரிப் அலி ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் சங்கு நகர் நகர் சதாம் உசேன் மற்றும் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈ பி ரவி, துணைத்தலைவர் ராஜேஷ் ராஜப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர் இதில் ஆர் விஜயபாஸ்கர், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே என் பாஷா, முன்னாள் வட்டாரத் தலைவர் செல்வராஜ் முன்னாள் மாமன்ற உறுப்பினர் சூரம்பட்டி சாம்ராட் அசோக் மாநில பொதுக் குழு உறுப்பினர் வி கே செந்தில் ராஜா, மாவட்ட மகிள காங்கிரஸ் தலைவி எம் ஞானதீபம், ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவி சினேகா ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரசன்னா மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு மலர் தூவி மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

அந்தியூர் வட்டாரத்தில்

# சந்தைப்பேட்டை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கல்வித்திட்ட முகாம்



ஈரோடு ஜூன் 14-

ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாரத்தில் உள்ள ஈ.டி.1901 சந்தைப்பேட்டை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் துணைப்பதிவாளர் (பால்வளம்) ஈரோடு .அ.சையத் ஏஜாஸ் தலைமையில் சங்க உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கல்வித்திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில், உறுப்பினர்கள் தரமான உற்பத்தியை பெருக்க தேவையான நடவடிக்கை எடுப்பது குறித்தும், கால்நடைகளுக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சை குறித்தும், மருத்துவர்கள் அளிக்கக்கூடிய சேவை குறித்தும், அரசு வழங்கும் 1 லிட்டர் பாலுக்கு ரூ.3.00 கூடுதல் ஊக்கத் தொகை கொடுத்தும், கால்நடை தீவனம். தாது உப்பு, தரத்திற்கேற்ற நியாயமான பால்களை வழங்குவது, உயர்த்தப்பட்ட அண்ணா நலநிதி திட்டம், நிகழிடை ஒப்புகை ஆகியவைகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு குறித்து உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். இச்சங்கத்தில் இயற்கை மரணம் அடைந்த பால் ஊற்றும் உறுப்பினர் .பொங்கியண்ண கவுண்டரின் (உறுப்பினர் எண்.223) வாரிசுதாரருக்கு திருத்தியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்னணா நலநிதி திட்டத்தின்கீழ் ஈமச்சடங்கு நிதி உதவித்தொகை ரூ.25,000/- நிதியுதவி வழங்கப்பட்டது. அப்போது சரசு முதுநிலை ஆய்வாளர் (பால்) த.தாமரைச்செல்வன், சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

# ஈரோடு வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் 45 பயனாளிகளுக்கு ரூ.15.87 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர்கள் சு.முத்துசாமி, டாக்டர்.மா.மதிவேந்தன் வழங்கினர்



ஈரோடு,ஜூன்.14-

ஈரோடு வட்டத்திற்குட்பட்ட புங்கம்பாடி, வடமுகம் வெள்ளோடு, எலவமலை, மேட்டுநாசுவம்பாளையம் மற்றும் பேரோடு ஆகிய ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் ஆகியோர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, குறைகளை கேட்டறிந்து 45 பயனாளிகளுக்கு ரூ.15.87 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்திடும் வகையிலும், உரிய காலத்தில் அனைத்து அரசு நலத் திட்டங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

மேலும், பொதுமக்கள் அரசுத்துறைகளை தேடி வந்து மனுக்களை அளித்த நிலையை மாற்றி அரசுத் துறை அலுவலர்கள் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களது கிராமங்களுக்கே சென்று மனுக்களை பெற்று தீர்வு வழங்கிடவும், ஏழை, எளிய பழங்குடியின மக்களின் கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து கூடுதல் கவனம் செலுத்திட வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், "மக்களுடன் முதல்வர்" முகாம்களை நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள். இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மை - உழவர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த புதிய மின் இணைப்பு, மின் கட்டணம் மாறுதல், மின் இணைப்பு பெயர் மாற்றம், பட்டா மாறுதல், ஓய்வுதிய திட்டங்கள், குடிநீர் இணைப்பு, வீட்டுவரி, குடும்ப அட்டை பெயர் மாற்றம், முகவரி மாற்றம், பொருளாதார குற்றங்கள் மோசடி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, ஆதரவற்றோருக்கான உதவித்தொகை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், நுண்ணீர் பாசனம் உள்ளிட்ட 44 வகையான கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காணப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் புங்கம்பாடி ஊராட்சி, கலை மண்டபம், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி, கொம்மக்கோவில் பகவதி அம்மன் திருமண மண்டபம், எலவமலை ஊராட்சி, வட்டக் கல்சேரி சமுதாயக் கூடம் மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சி, மணக்காட்டூர் சமுதாயக் கூடம் மற்றும் பேரோடு ஊராட்சி, சமுதாயக் கூடம் ஆகிய இடங்களில் நடைபெற்ற முகாம்களில், பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவுத்துறை, தொழிலாளர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் பட்டா மாறுதல் ஆணை, வீட்டுவரி பெயர் மாற்றம், கன்று வளர்ப்பு கடன் தொகை, இலவச வீட்டுமனை பட்டா, நத்தம் பட்டா மாறுதல், வீட்டுவரி பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், நலவாரிய உறுப்பினர் பதிவு அட்டைகள், மகளிர் சுய உதவிக்குழு கடன், தொழில் கடனுதவி, சிறு, குறு விவசாய சான்று, இதர பிற்பட்ட வகுப்பினர் சான்று, மாற்றுத்திறனாளி கடன் என மொத்தம் 45 பயனாளிகளுக்கு ரூ.15.87 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு கோட்டாட்சியர் ரவி, தனி துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செல்வராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், வட்டாட்சியர்கள் ஜெகநாதன் (பெருந்துறை), முத்துகிருஷ்ணன் (ஈரோடு) உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி தங்காடு பகுதியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 62 பேருக்கு ரூ.38.78 லட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி,ஜூன்.14-

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், பாலக்கொலா ஊராட்சிக்குட்பட்ட தங்காடு பகுதியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு 62 பயனாளிகளுக்கு ரூ.38.78 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில்,மாவட்டகலெக்டர் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் நேரடியாக கிராமப் பகுதிகளுக்கு சென்று மக்கள் தொடர்பு முகாம் மூலமாக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிப்பதோடு, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவது தான் மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும்.

இன்று பாலக்கொலா ஊராட்சியில் நடைபெற்று வரும் இந்த மக்கள் தொடர்பு முகாமில், ஒரு முக்கியமான சிறப்பு என்னவென்றால் இதுவரை இந்த பகுதியில் ஒரு குழந்தை திருமணம் நடக்கவில்லை எனவும், சிறுவயது பெண்கள் கர்ப்பம் தரித்ததோ இல்லை என மருத்துவர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. இது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். இதற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இம்முகாமில், சமூகநலத்துறை சார்பில் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புதிட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு 1 இலட்சம் மதிப்பில் வைப்பு பத்திரங்களையும், தோட்டக்கலைத் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.56,686ஃ- மதிப்பில் தெளிப்பு நீர் பாசன கருவிகளையும், வேளாண் பொறியியல் துறை சார்பில் 1 பயனாளிக்கு ரூ.9,600- மதிப்பில் தேயிலை அறுவடை இயந்திரத்தினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.10,000- மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களையும், 8 பயனாளிகளுக்கு மக்களைத்தேடி மருந்து பெட்டகங்களையும், 3 நபர்களுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.50,000- மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், 1 பயனாளிக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகையினையும், 6 பயனாளிகளுக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையினையும், 8 பயனாளிகளுக்கு ரூ.18,750- மதிப்பில் கல்வி உதவித்தொகைகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.24,000- மதிப்பில் நிதி ஆதரவு திட்டத்திற்கான ஆணையினையும், மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் 2 பயனாளிக்கு ரூ.7.90 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவிகளையும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 12 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.12 இலட்சம் மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதி உதவிக்கான காசோலைகள் என மொத்தம் 62 பயனாளிகளுக்கு ரூ.38.78 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், பாலக்கொலா ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை 730 திட்டப் பணிகள் ரூ.21.09 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல், 112 வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 35 வீடுகள் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த மாதத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் அவர்களின் ஆணைக்கிணங்க, மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு முகாம் தொடங்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று விண்ணப்ப படிவங்களை வழங்குவார்கள். முகாம் நடைபெறும் போது பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்களுடன் சம்மந்தப்பட்ட பத்திரத்தின் நகல்களை கொண்டு வர வேண்டும். இம்முகாமில் 13 துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் 46 சேவைகளை வழங்க உள்ளார்கள். இம்முகாமினை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். அதேபோல் மருத்துவ முகாம்களும் நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் சர்க்கரை அளவு, இரத்த கொதிப்பு பரிசோதனை மட்டுமின்றி, அனைத்து பரிசோதனைகளும் செய்யப்படும் வகையில் நடத்தப்படவுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இரண்டு மாதத்திற்கு முன்பாக திறந்து வைக்கப்பட்டது. இந்த மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன், டிஜிடெட்டல் எக்ஸ்ரே, 12 ஆபரேசன் தியேட்டர்கள், மருத்துவர்கள் என அனைத்து வசதிகளும் உள்ளன. இது போன்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. எனவே, பொதுமக்கள் அத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு பயன் பெற வேண்டும் எனவும், அடுத்த இரண்டு நாட்கள் மிக கன மழை பெய்ய இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால், பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என கலெக்டர் தெரிவித்தார்.

முன்னதாக, கலெக்டர் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வருவாய்த்துறை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இம்முகாமில், உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் நவநீதா, மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பிரம்ம வித்யநாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பழனிச்சாமி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்தகல்கி, வட்டார மருத்துவ அலுவலர் மரு முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டடோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் சுரேஷ்கண்ணன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் (பொ) திலகவதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணக்குமார், வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் செந்தில்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நலஅலுவலர் குப்புராஜ், குந்தா வட்டாட்சியர் சுமதி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், ஸ்ரீதர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்



**நீலகிரி மாவட்டம், குந்தா கிழக்கு ஒன்றியம் கீழ்குந்தா பேரூராட்சியில் மாவட்ட அதிமுக செயலாளர் கப்பச்சி வினோத் அறிவுறுத்தலின் பேரில் பூத் கமிட்டி புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சி பேரூராட்சி செயலாளர் தூனேரி எம்.சிவராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மீனவரணி மாவட்ட செயலாளர் விசாந்த், தொழிற்சங்க மாவட்ட இணை செயலாளர் கோபால் உட்பட பலர் உள்ளனர்.**

# தர்மபுரியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே.அன்பழகன் - உறுப்பினர்கள் பதவியேற்பு



**தர்மபுரி ஜூன்.14-**

தர்மபுரியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே. அன்பழகன் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

தர்மபுரி மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக முன்னாள் நகர தி.மு.க. செயலாளரும், முன்னாள் நகராட்சி கவுன்சிலருமான மே. அன்பழகன் மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களாக கோ. கிருஷ்ணமூர்த்தி, ஒயிலர் குப்பன், எம். கே. துரை மற்றும் மாலா திரு வேங்கடம் ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்பு விழா தர்மபுரி குமாரசாமி பேட்டை செங்குந்தர் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவுக்கு இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மகாவிஷ்ணு தலைமை தாங்கி புதிதாக நியமிக்கப்பட்ட தர்மபுரி மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே. அன்பழகன் மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட மாவட்ட அறங்காவலர் குழுவினர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து விழாவுக்கு முன்னிலை வகித்த தி.மு.க. கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வக்கீல் ஆ. மணி எம்.பி, மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. பழனியப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, நகர செயலாளர் நாட்டான் மாது ஆகியோர் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். நகராட்சி துணைத் தலைவர் நித்யா அன்பழகன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் குத்துவிளக்கு ஏற்றினர். தொடர்ந்து குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணியசாமி கோவில், கோட்டை மல்லிகார்ஜுன சுவாமி மற்றும் பரவாசுதேவ பெருமாள் கோவில் உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய கோவில்களின் சார்பில் பிரசாதம் வழங்கி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இந்த பதவியேற்பு விழாவில் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள், பேரூராட்சித் தலைவர்கள், கோவில் அறங்காவலர் குழு தலைவர்கள், கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள், கட்சியின் முன்னணி நிர்வாகிகள், கோவில் செயல் அலுவலர்கள், நகராட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# ஒசூர் அருகே திமுக ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் : எம்எல்ஏ பங்கேற்பு



**கிருஷ்ணகிரி,ஜூன்.14-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அடுத்த கெலவரப்பள்ளி நீர்தேக்க அணை அருகே சப்பளம்மா கோவில் வளாகத்தில் ஒசூர் ஒன்றியத் திற்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது திமுக ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி தலைமையில் நடந்த கூட்டத்தில், ஒசூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மற்றும் ஒசூர் எம்எல்ஏ, திமுக மாவட்ட செயலாளர் பிரகாஷ் ஆகியோர் பங்கேற்று வருகிற சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றி பெற வாக்குச்சாவடிகள் தோறும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து பல் வேறு ஆலோசனைகளை வழங்கினர் இக்கூட்டத்தில் ஒசூர் மாநகர மேயர் சத்யா மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமார், சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் நாகேஷ் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

# அகமதாபாத் விமான விபத்தில் இறந்தவர்களுக்கு தர்மபுரியில் பாஜகவினர் அஞ்சலி



**தருமபுரி,ஜூன்.14-**

அகமதாபாத்தில் இருந்து நேற்று முன்தினம் லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் சில நிமிடங்களில் வழித்தடம் அருகே விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணம் செய்த இந்தியா உட்பட பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மற்றும் விமானம் விழுந்து விபத்துக்குள்ளான பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்டோர் பரிதாபமாக இறந்தனர். இந்த விபத்தில் இறந்தவர்களுக்கு தருமபுரி நகர பாஜ சார்பாக நேற்று தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதற்கு நகர தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். நகர பொதுச்செயலாளர் பிரகாஷ், செயலாளர் மாதேஷ் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் சரவணன், முன்னாள் மாவட்ட தலைவர் பாஸ்கர், முன்னாள் பொதுச்செயலாளர் வெங்கட்ராஜ் உட்பட ஏராளமான பாஜக வினர் விமான விபத்தில் இறந்தவர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# குரூப் 1,1ஏ பணிகள் முதல்நிலைத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடந்தது



**சேலம்,ஜூன்.14-**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் குரூப் 1, 1ஏ பணிகள் முதல்நிலைத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் (13.06.2025) சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் வருகின்ற 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மட்டும் நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் குரூப் 1, 1ஏ பணிகள் முதல்நிலைத் தேர்வினை சேலம் மாவட்டத்தில் 14,291 தேர்வர்கள் எழுத உள்ளனர். இதற்கென சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம், சேலம் மேற்கு, சேலம் தெற்கு மற்றும் ஆத்துhர் ஆகிய தேர்வு மையங்களில் அமைக்கப்பட்டுள்ள 41 பள்ளி மற்றும் கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள 55 தேர்வுக் கூடங்களில் காலை 9:30 மணி முதல் மதியம் 12:30 மணி வரை இத்தேர்வு நடைபெறவுள்ளது.

குறிப்பாக, காலை 8:30 மணிமுதல் தேர்வுக் கூடத்தில் தேர்வர்களை அனுமதிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் தேர்வர்கள் உரிய நேரத்தில் தங்களுக்கான இருக்கைகளில் வந்து அமர்ந்திட வேண்டுமெனவும், காலை 9 மணிக்குள் தேர்வுக் கூடத்திற்கு வருகைதரும் தேர்வர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தேர்வர்கள் தங்களுக்கு ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்திடும் வகையில் குறித்த நேரத்தில் தேர்வுக் கூடத்திற்கு வருகைதர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தேர்வினை கண்காணிப்பதற்காக 14 நடமாடும் கண்காணிப்பு குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்வுக் கூடங்களைக் கண்காணித்திடவும், தேர்விற்கான அனைத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் பல்வேறு நிலையிலான அலுவலர்கள் மற்றும் தலைமை கண்காணிப்பாளர் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் விதிமுறைக்கேற்ப வினாத்தாள் வழங்குதல், விடைத்தாள் வழங்குதல், விடைத்தாள்களை சேகரித்தல், தேர்வு எழுதும் நேரம் மற்றும் தேர்வு எழுதுபவர்களின் நுழைவுச் சீட்டு ஆகியவற்றை சரிபார்த்தல் போன்ற பல்வேறு பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தேர்வு எழுதவரும் தேர்வர்கள் தங்களது அனுமதிச் சீட்டினை கட்டாயம் எடுத்துவர வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி 1, 1ஏ பணிகளுக்கான தேர்வினை சேலம் மாவட்டத்தில் விதிமுறைகளுக்கு உட்பட்டு சிறப்பாக நடத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி கலெக்டர் (பயிற்சி) விவேக் யாதவ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செந்தில் அரசன், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பிரிவு அலுவலர் தட்சணாமூர்த்தி, உதவி பிரிவு அலுவலர் செல்வகுமார், வருவாய்த் துறை, காவல் துறை, மாவட்ட கருவூலத்துறை, தீயணைப்பு - மீட்பு பணிகள் துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கல்லூரி மற்றும் பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம் உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் உழவரை தேடி வேளாண்மை உழவர் நல திட்டம்

## இணை இயக்குனர் பங்கேற்பு



**கிருஷ்ணகிரி,ஜூன்.14-**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் அடுத்த பாலே கு ளி யில் வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் உழவரைத் தேடி வேளாண்மை, உழவர் நல திட்டம். மாவட்ட கலெக்டர் ச.தினேஷ்குமார் உத்தரவின் பேரில் கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குனர் பச்சையப்பன் தலைமையில் வேளாண் வேளாண்மை துறை சார்ந்த தோட் டக் க லைத் து றை, வேளாண் பொறியியல் துறை, மீன் வளர்ப்பு துறை, பட்டு வளர்ப்பு துறை, கால் நடை பராமரிப்பு துறை, வனத்துறை, வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலை கல்லூரி, வேளாண் விற்பனை துறை உள்ளிட்ட ஏழு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர் இதில் 22 மனுக்கள் பெறப்பட்டது, பெறப்பட்ட 21 மனுக்கள் உடனடியாக தீர்வு காணப்படும் என்பதால் உடனே தீர்வு காணப்பட்டது. ஒரு மனு மட்டும் உழவர் இயந்திரம் வேண்டிய உள்ளதால் தற்பொழுது திட்டம் இல்லாததால் முன்னுரிமையில் திட்டம் வந்ததும் அளிக்கப்படும் என உறுதி அளித்தனர்.

அப்போது வேளாண்மை இணை இயக்குனர் பச்சையப்பன் தெரிவித்ததாவது, ஒவ்வொரு கிராமத்திற்கும் காலையில் எட்டு மணிக்குள் விவசாயிகளிடம் நேரடியாக சென்று கோரிக்கை மனுக்களை பெற்று அன்றே 10 மணிக்குள் அதிகாரிகளைக் கொண்ட குழுவாக முகாம் அமைத்து விவசாயிகளுடன் ஆலோசனை செய்து கோரிக்கையை மனுக்களாக பெற்று உடனடியாக விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றப்படுகிறது, இதனால் சாதாரண ஏழை எளிய விவசபெருமக்கள் ஏராளமானோர் பயன் பெற்று செல்கின்றனர், மாவட் டத் தி லுள்ள அனைத்து வட்டத்திலும் விவசாயி பெருமக்களிடம் நேரடியாக சென்று அவர்களின் குறைகளை கேட்டு மனுக்களாக பெற்று உடனடியாக தீர்வு

காணப்படுவதாக தெரிவித்தார். இத்திட்டம் விவசாயிகளுக்கு நேரடியாக சென்று பயன் பெறுவதால் விவசாயிகள் திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி

## கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையில் நடைபெற்றது





**தருமபுரி,ஜூன்.14-**

இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அவர்களின் அறிவுரைகளின் படி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கும் புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு தருமபுரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ரெ.சதீஸ், அவர்களின் தலைமையில் பயிற்சி வகுப்பு மாவட்ட கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் (13.06.2025) நடைபெற்றது.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, மேம்பாடு தொடர்பாகவும், ஒரு வாக்குச்சாவடிக்கு 1200 வாக்காளர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற தேர்தல் ஆணையம் நிர்ணயத்தின் திருத்தப்பட்ட வரையரையின்படி தருமபுரி மாவட்டத்தில் உள்ள 57-பாலக்கோடு, 58-பென்னாகரம், 59-தருமபுரி, 60-பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் 61-அரூர் (அ.வ.) உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச் சாவடிகளை மறுசீரமைப்பது, தேர்தல் பணிகளில், வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணிகளில் முதல் நிலை அலுவலர்களான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் காண்காணிப்பாளர்கள் ஆகியோரின் நியமனம் மற்றும் பயிற்சி, தேர்தல் தொடர்பாக பயன்பாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் குறித்தும்,

அவற்றை பயன்படுத்துவது தொடர்பாகவும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல், நீக்கல், திருத்தம் தொடர்பான நடைமுறைகள், பட்டியலை செம்மைபடுத்துதல், இறந்துவிட்ட, குடிபெயர்ந்த நபர்களை பட்டியலில் இருந்து நீக்கம் செய்தல், உள்ளிட்ட பணிகள் குறித்தும், வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்த வேண்டிய வசதிகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) பூங்கோதை, அரசுத்துறை உயர் அலுவலர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், அனைத்து உதவி வாக்காளர் பதிவு அலுவர்கள், வட்டாட்சியர்கள், தேர்தல் துணை வட்டாட்சியர்கள் மற்றும் அனைத்து துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
போச்சம்பள்ளி.
I.A. No:1/2025 -in-
O.S. No:Nil/2025.
சதீஷ், த.பெ. மணி,
நெ.2/455, பேருஅள்ளி கிராமம்,
நாகரசம்பட்டி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்/வாதி.
//எதிராக//
1. திரு.முருகன் ஒப்பந்ததாரர்,
2. வட்டார வளர்ச்சி அலுவலர், காவேரிப்பட்டிணம்.
3. உதவி செயற்பொறியாளர்
4. ஊராட்சி பணிகள், வுட்டார வளர்ச்சி அலுவலகம், காவேரிப்பட்டிணம்.
5. தமிழ்நாடு அரசுக்காக, மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.
அறிவிப்பு

மேற்படி வழக்கின் வாதி, மருதேரி வருவாய் கிராம புல எண்: 393-ல் 00.07.50-விஸ்தீரனத்தில் 110.2-மீட்டர் நீளமும், புல எண்: 394-யை ஒட்டியவாரு 7.8-மீட்டர் அகலமும், புல எண்:465-ல் ஒட்டியவாறு 6.6-மீட்டர் அகலமும் கொண்ட தார்சாலை உள்ளதை மாற்றி சிமெண்ட் சாலை அமைப்பது சமபந்தமாக பேருஅள்ளி கிராம மக்கள் சார்பாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை உத்திரவுக்கோரி வழக்கும், இடைமனுவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி சொத்து சம்பந்தமாக வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை உத்திரவுக்கோரி பேருஅள்ளி கிராம மக்கள் சார்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளது குறித்து பேருஅள்ளி கிராம மக்கள் யாருக்கேனும், ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வரும் 08.07.2025-ம் தேதி காலை 10.00-மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெறிவித்துக்கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

//நீதிமன்ற உத்திரவுப்படி//
S.RAGAVENDIRAN.B.A., LL.B.,
ADVOCATE,
MS.No.7340/2024,
POCHAMPALLI-635206
KRISHNAGIRI-Dt,
Cell No:8220520789,

# நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள்

## கலெக்டர் ச.உமா நேரில் ஆய்வு



**நாமக்கல்,ஜூன்.14-**

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் கலெக்டர் மருத்துவர் ச.உமா, (13.06.2025) பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து, நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதன்படி, சேந்தமங்கலம் வட்டம், திருமலைப்பட்டியில் சமுதாய கூடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யும் பணியினை நேரில், பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கல்குறிச்சி பகுதியில், செம்டெக் நிறுவனத்தில் பெட்ரோலிய தாதுப் பொருட்கள் சேமிப்பு கிடங்கு அனுமதி வழங்குவது தொடர்பாகவும், காந்திபுரம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தர்கா மற்றும் பள்ளிவாசல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணவேணி உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ENROLLMENT NOTICE**

After Ten days of the publication of this Notice and within THREE months thereafter I, SUBHASHINI PRASATH.B, D/o BALAJIRAM, aged 24-years, Permanently Residing at D. No:1/352, Vadamalampatti Village, Pochampalli Post and Taluk, Krishnagiri District, TamilNadu-635206. Intend having my enrollment as an advocate moved before the Bar council of TamilNadu, Bar counsel Building, High court campus, Chennai-104. Those who have any valid objection may notify the same to the Bar council within 10 days.

SUBHASHINI PRASATH.B

தமிழ்நாடு அரசு
**கீழ்குளம் பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்**
**மூலதனமானிய நிதி திட்டம்-2025-2026**

ந.க.எண்: 205 / 2025 /அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 11.06.2025

கன்னியாகுமரி மாவட்டம், கீழ்குளம் பேரூராட்சி மூலதனமானிய நிதி திட்டம் 2025-2026-ன் கீழ் ரூ.72.00 இலட்சம் மதிப்பீட்டில் **கீழ்குளம் பேரூராட்சிக்கு உட்பட்ட கண்ணத்தான் குழி வாய்க்காலில் தடுப்புச்சுவருடன் புதிய பாலம் அமைத்து ஆப்பிக்கோடு சாலையுடன் இணைத்தல் பணி** மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 27.06.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ- டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 26.06.2025 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் **E - Token / Digital Signature Card** உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

**தலைவர்
கீழ்குளம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்**

**செ.ம.தொ.இ /3020 / ஒப்பந்தப்புள்ளி / 2025**

**செயல் அலுவலர்
கீழ்குளம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்**

மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம்,
கிருஷ்ணகிரி
I.A.No.1/2024 in
A.S.No.Unnumbered/2024
முனியேந்திரன்,
த/பெ. சின்னகொட்டபுலி (எ) வெங்கட்டசாமி,
சின்னமேலுப்பள்ளி கிராமம்,
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.
----மனுதாரர்
---எதிராக---
ரமேஷ் த/பெ. லேட்.ராமசாமி,
சின்னமேலுப்பள்ளி கிராமம்,
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.
----3ம் எதிர்மனுதாரர்
பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரர் உங்களுக்கு எதிராகவும் மற்றவர்களுக்கு எதிராகவும் கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2018 என்ற வழக்கின் தீர்ப்பு மற்றும் தீப்பாணையை எதிர்த்து கிருஷ்ணகிரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். I.A.No.1/2024 in A.S.No. Unnumbered/2024 தாக்கல் செய்துள்ளார். மேற்படி மேல்முறையீட்டு வழக்கானது வருகின்ற 24.06.2025-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரம் குறித்து தங்களது ஆட்சேபணைகள் இருந்தால் வரும் 24.06.2025-ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தாங்கள் ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என்றும், ஆட்சேபணை செய்ய தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

---நீதிமன்ற உத்திரவுப்படி---
T.A.மேகநாதன், B.A., B.L.,
C.சந்திரசேகர், B.Sc., LL.B.,
A.தருண், B.Com., LL.B., (Hons),
வழக்கறிஞர்கள், கிருஷ்ணகிரி.

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:4289/2025,
நாள்:12.06.2025.
M.அனு, க/பெ. S.P.கோவிந்தராஜ்,
த/பெ. முருகன்,
க.எண்:2/46, மாரியம்மன் கோவில் தெரு, சுந்தரம்பள்ளி கிராமம் & அஞ்சல்,
திருப்பத்தூர் வட்டம் &மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி.
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு.

மேற்படி மனுதாரராகிய நான் எனது தகப்பனார் முருகன் என்பவருக்கும், எனது தாயார் சித்ரா என்பவருக்கும் கடந்த 17.03.2002-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், ஜிங்கல்கதிரம்பட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் என்னுடைய தாயார் வீட்டில் பிறந்தேன். அப்போது எனக்கு மு.அனு (M.ANU) என பெயர் சூட்டினார்கள். எனது பிறப்பின் போது எனது பெற்றோர்களின் அறியாமையின் காரணத்தினால் எனது பிறப்பை பதிவு செய்ய தவறிவிட்டார்கள். ஆகையால் தற்போது என்னுடைய பிறப்பு சான்று மேற்படிப்பிற்காக தேவைப்படுவதால். எனது பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15-தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு.
M.அனு, க/பெ. S.P.கோவிந்தராஜ்,
த/பெ. முருகன்,

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மே.எ.அ.தி.மு.எண்:4288/2025,
நாள்:12.06.2025.
S.P.கோவிந்தராஜ்,
த/பெ. லேட்.பொன்னுசாமி,
க.எண்:2/46, மாரியம்மன் கோவில் தெரு, சுந்தரம்பள்ளி கிராமம்&அஞ்சல்,
திருப்பத்தூர் வட்டம்&மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி.
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு.

மேற்படி மனுதாரராகிய நான் எனது தகப்பனார் பொன்னுசாமி என்பவருக்கும், எனது தாயார் செல்வி என்பவருக்கும் கடந்த 28.05.1989-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், குள்ளம்பட்டி அஞ்சல், சந்தம்பட்டி கிராமத்தில் என்னுடைய பாட்டி வீட்டில் பிறந்தேன். அப்போது எனக்கு S.P.கோவிந்தராஜ் (S.P.GOVINDARAJ) என பெயர் சூட்டினார்கள். எனது பிறப்பின் போது எனது பெற்றோர்களின் அறியாமையின் காரணத்தினால் எனது பிறப்பை பதிவு செய்ய தவறிவிட்டார்கள். ஆகையால் தற்போது என்னுடைய பிறப்பு சான்று பாஸ்போர்ட்டிற்காக தேவைப்படுவதால். எனது பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15-தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு.
S.P.கோவிந்தராஜ்,
த/பெ. லேட்.பொன்னுசாமி,

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மனு எண்:217/2025, நாள்:21.05.2025
S.வேலுமணி, த.பெ. லேட்.சீனிவாசன்,
மங்கலப்பட்டி கிராமம்,
M.G.அள்ளி அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.
//எதிராக//
திரு.வருவாய் வட்டாட்சியர்,
போச்சம்பள்ளி வட்டம்,
எதிர்மனுதாரர்.
அறிவிப்பு

மனுதாரராகிய நான் எனது தந்தை சீனிவாசன் என்பவர் கடந்த 11.05.2021-ம் தேதியில் மேற்படி விலாசத்தில் எங்களது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி எனது தந்தையின் இறப்பினை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். எனது தந்தையின் இறப்பினை பதிவு செய்ய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் வருவாய் தீர்வாயம் பசலி ஆண்டு 1434-ல் திரு.ஜமாபந்தி அலுவலர் அவர்களிடம் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளேன். இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த செய்தித்தாள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15-நாட்களுக்குள் நேரில் ஆஜராகி தெறிவித்துக்கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

//வருவாய் கோட்டாட்சியர் உத்திரவுப்படி//
மனுதாரர்
S.வேலுமணி, த.பெ. லேட்.சீனிவாசன்,
மங்கலப்பட்டி கிராமம்,
M.G.அள்ளி அஞ்சல்,

### உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி:
# தென் ஆப்பிரிக்காவுக்கு 282 ரன்களை இலக்காக நிர்ணயித்த ஆஸ்திரேலியா



**லண்டன், ஜூன் 14-**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற ஆஸ்திரேலியா 282 ரன்களை இலக்காக நிர்ணயித்துள்ளது.

**3-வது உலக டெஸ்ட்...**

நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா - தென்ஆப்பிரிக்கா அணிகள் இடையிலான 3-வது உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 212 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. ஸ்டீவன் சுமித், வெப்ஸ்டர் அரைசதம் அடித்தனர்.

**ஊசலாட்டம்...**

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென்ஆப்பிரிக்கா தொடக்க நாளில் 4 விக்கெட்டுக்கு 43 ரன்களுடன் ஊசலாடியது. கேப்டன் பவுமா (3 ரன்), டேவிட் பெடிங்ஹாம் (8 ரன்) களத்தில் இருந்தனர். 2-வது நாளான நேற்று முன்தினம் தென்ஆப்பிரிக்கா தொடர்ந்து பேட்டிங் செய்தது. ஆஸ்திரேலியாவின் ஆக்ரோஷமான பந்து வீச்சு தாக்குதலை தென்ஆப்பிரிக்க பேட்டர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர்கொண்டனர். நிறைய பந்துகளை தொடவே இல்லை. இதனால் முதல் ஒரு மணி நேரம் விக்கெட் விழாமல் சமாளித்தனர். ஸ்கோர் 94 ஆக உயர்ந்த போது பவுமா (36 ரன், 84 பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக்சர்) கம்மின்ஸ் பந்து வீச்சில் 'கவர்' திசையில் நின்ற லபுஸ்சேனிடம் சிக்கினார்.

**மளமளவென சரிந்தன...**

இதைத் தொடர்ந்து பெடிங்ஹாம் ஒரு பக்கம் போராட இன்னொரு பக்கம் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன. கம்மின்ஸ், அவர்களின் பேட்டிங் வரிசையை முற்றிலும் உருக்குலைத்தார். கைல் வெரைன் (13 ரன்), மார்கோ யான்சென் (0), கேஷவ் மகராஜ் (7 ரன்) சீக்கிரம் நடையை கட்டினர். பெடிங்ஹாம் தனது பங்குக்கு 45 ரன்கள் (111 பந்து, 6 பவுண்டரி) எடுத்தார்.

**138 ரன்னில்...**

முடிவில் தென்ஆப்பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 57.1 ஓவர்களில் 138 ரன்னில் அடங்கியது. ஆஸ்திரேலிய தரப்பில் கேப்டன் கம்மின்ஸ் 6 விக்கெட்டுகளை அறுவடை செய்தார். லார்ட்ஸ் மைதானத்தில் ஒரு கேப்டனின் மகத்தான பந்து வீச்சாக இது பதிவானது. மிட்செல் ஸ்டார்க் 2 விக்கெட்டும், ஹேசில்வுட் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். அடுத்து 74 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலியாவும் பேட்டிங்கில் சொதப்பியது. முதல் இன்னிங்சில் டக்-அவுட் ஆன கவாஜா 2-வது இன்னிங்சிலும் சோபிக்கவில்லை. 6 ரன்னில், ரபடாவின் வேகத்துக்கு இரையானார்.

**நிலைக்கவில்லை...**

அதே ஓவரில் கேமரூன் கிரீனும் (0) வீழ்ந்தார். எதிர்பார்க்கப்பட்ட மார்னஸ் லபுஸ்சேன் (22 ரன்), ஸ்டீவன் சுமித் (13 ரன்) அதிக நேரம் நிலைக்கவில்லை. ஆடுகளத்தில் பந்து சரமாரியாக 'ஸ்விங்' ஆனதால் அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுகளை துரிதமாக தாரை வார்த்தனர். டிராவிஸ் ஹெட் (9 ரன்), வெப்ஸ்டர் (9 ரன்), கம்மின்ஸ் (6 ரன்) உள்ளிட்டோர் ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. அப்போது ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுக்கு 73 ரன்களுடன் மோசமான நிலையில் தவித்தது.

**நெருக்கடியான சூழல்...**

இந்த நெருக்கடியான சூழலில் களம் கண்ட விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி கணிசமாக ரன் எடுத்து ஒரு வழியாக ஆஸ்திரேலியாவை மூன்று இலக்கத்தை தொட வைத்தார். அலெக்ஸ் கேரி 43 ரன்களில் (50 பந்து, 5 பவுண்டரி) எல்.பி. டபிள்யூ ஆனார். ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்சில் 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 144 ரன்கள் சேர்த்து மொத்தம் 218 ரன்கள் முன்னிலை பெற்றது.

**281 ரன்கள் முன்னிலை...**

தொடர்ந்து 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. மிட்செல் ஸ்டார்க் (16 ரன்), நாதன் லயன் (1 ரன்) இருவரும் இன்று தொடர்ந்து பேட்டிங் செய்தனர். விரைவில் ஆல் அவுட் ஆகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஸ்டார்க் பொறுப்புடன் செயல்பட்டு ரன்களை திரட்டினார். அவர் 136 பந்துகளில் 58 ரன்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 65 ஓவர்களில் 217 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. ஸ்டார்க் - ஹேசல்வுட் ஜோடி கடைசி விக்கெட்டுக்கு 59 ரன்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் மொத்தமாக ஆஸ்திரேலிய அணி 281 ரன்கள் முன்னிலை பெற்றது. இதனால் தென் ஆப்பிரிக்க அணிக்கு 281 ரன்கள் என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இலக்கை விரட்டிப்பிடிக்க தென் ஆப்பிரிக்க அணி பேட்டிங் செய்ய உள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்: 43 ஆண்டு கால சாதனையை முறியடித்த கம்மின்ஸ்

**லார்ட்ஸ், ஜூன் 14-**

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் 43 ஆண்டு கால சாதனையை கம்மின்ஸ் முறியடித்தார்.

**ரபாடா அபாரம்...**

லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் 3வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற தென் ஆப்பிரிக்கா முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் 56.4 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 212 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. ஆஸ்திரேலியா தரப்பில் பியூ வெப்ஸ்டர் 72 ரன் எடுத்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரபாடா 5 விக்கெட் வீழ்த்தினார்.

**கம்மின்ஸ் 6 விக்கெட்...**

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்கா 57.1 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 138 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிக பட்சமாக பெடிங்ஹாம் 45 ரன் எடுத்தார். ஆஸ்திரேலியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய கம்மின்ஸ் 6 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து தனது 2வது இன்னிங்சை ஆடி வரும் ஆஸ்திரேலியா அணி நேற்றைய 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் 40 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 144 ரன்கள் எடுத்துள்ளது. ஆஸ்திரேலிய அணி இதுவரை 218 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

**281 ரன்கள் இலக்கு...**

தொடர்ந்து 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. ஸ்டார்க் பொறுப்புடன் செயல்பட்டு ரன்களை திரட்டினார். அவர் 136 பந்துகளில் 58 ரன்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 65 ஓவர்களில் 217 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் மொத்தமாக ஆஸ்திரேலிய அணி 281 ரன்கள் முன்னிலை பெற்றது. இதனால் தென் ஆப்பிரிக்க அணிக்கு 281 ரன்கள் என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**43 ஆண்டு சாதனை...**

இந்நிலையில், தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் அவர் 43 ஆண்டு கால சாதனை ஒன்றை முறியடித்துள்ளார். அதாவது, கம்மின்ஸ் முதல் இன்னிங்சில் 18.1 ஓவர்களில் 6 மெய்டனுடன் 28 ரன் மட்டுமே வழங்கி 6 விக்கெட்டுகளை சாய்த்தார்.

**சிறந்த பந்து வீச்சு...**

புகழ்பெற்ற லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் இன்னிங்சில் ஒரு கேப்டனின் ஆகச் சிறந்த பந்து வீச்சு இதுவாகும். இதற்கு முன்பு 1982-ம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் இங்கிலாந்து கேப்டன் பாப் வில்லிஸ் 101 ரன்னுக்கு 6 விக்கெட் எடுத்ததே இந்த வகையில் சிறந்த பந்து வீச்சாக இருந்தது. 43 ஆண்டு கால அந்த சாதனையை கம்மின்ஸ் முறியடித்தார். மேலும் ஐ.சி.சி. நடத்தும் கிரிக்கெட்டில் இறுதிப்போட்டி ஒன்றில் சிறந்த பந்து வீச்சாகவும் இது அமைந்தது.

**40-வது வீரர்...**

மேலும், கம்மின்ஸ் எடுத்த 6 விக்கெட்டுகளையும் சேர்த்து டெஸ்டில் அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 300-ஆக (68 டெஸ்ட்) உயர்ந்தது. இந்த மைல்கல்லை எட்டிய 40-வது வீரர், ஆஸ்திரேலிய அளவில் 8-வது பவுலர் என்ற சிறப்பையும் கம்மின்ஸ் பெற்றார்.

# விம்பிள்டன் பரிசுத்தொகை..?

லண்டனில், வரும் ஜூன் 30 முதல் ஜூலை 13 வரை விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் நடக்கிறது. மொத்த பரிசுத் தொகை ரூ. 622 கோடி. இது, கடந்த ஆண்டை விட 7 சதவீதம் அதிகம். ஒற்றையரில் கோப்பை வெல்லும் வீரர், வீராங்கனைக்கு தலா ரூ. 35 கோடி பரிசு வழங்கப்பட உள்ளது. இது, கடந்த ஆண்டை விட 11.1 சதவீதம் அதிகம். முதல் சுற்றோடு திரும்பும் வீரர், வீராங்கனைகளுக்கு தலா ரூ. 76 லட்சம் பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டை விட 10 சதவீதம் அதிகம். இதேபோல இரட்டையர், கலப்பு இரட்டையர், வீல்சேர், ஜாம்பவான்களுக்கு இடையிலான போட்டியில் பங்கேற்கும் நட்சத்திரங்களுக்கான பரிசுத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. போட்டியில் பந்து 'பிட்ச்' ஆகும் இடத்தை எலக்ட்ரானிக் முறையில் கண்காணிக்க உள்ளனர்.

### நீலகிரிக்கு ரெட் அலர்ட்:
# 7 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஜூன் 14-**

நீலகிரிக்கு இன்று ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில் மேலும் 7 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான

ஆரஞ்ச் எச்சரிக்கையை சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததாவது., தமிழ்நாட்டில் இன்று மற்றும் நாளை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஒரிரு இடங்களில் பலத்த தரைக் காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும்.

நீலகிரி மாவட்டத்திற்கு இன்றும், நாளையும் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

### மலைப்பகுதியில் சாரல் மழை:
# குற்றாலம் அருவிகளில் குளிக்க தடை

**தென்காசி, ஜூன் 14-**

குற்றாலம் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியதால் தொடர்ந்து ஒரு வாரமாக அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

தென்காசி மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடை காலமான மே மாதத்திலேயே சாரல் மழை களைகட்டியது. தொடர் மழையால் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. தென்மேற்கு பருவமழைக் காலமான ஜூன் மாத தொடக்கத்தில் மழையின் தீவிரம் குறைந்தது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக மீண்டும் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. நேற்று (ஜூன் 13) காலையில் இருந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது. காலை வரை 24 மணி நேரத்தில் குண்டாறு அணையில் 38.40 மி.மீ., செங்கோட்டையில் 22 மி.மீ., அடவிநயினார் அணையில் 15 மி.மீ., கருப்பாநதி அணையில் 6 மி.மீ., ராமநதி அணையில் 3 மி.மீ., ஆய்க்குடியில் 2 மி.மீ. மழை பதிவானது.

மலைப்பகுதியில் பெய்த மழையால் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் நீர் வரத்து அதிகரித்தது. இதனால் பாதுகாப்பு கருதி வியாழக்கிழமை இரவு முதல் அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்றும் தொடர்ந்து நீர்வரத்து அதிகமாக இருந்ததால் இரண்டாவது நாளாக அருவிகளில் குளிக்க தடை நீடிக்கப்பட்டது.

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரை நினைத்தால் பதற்றமாக உள்ளது
### இந்திய அணி பயிற்சியாளர் தகவல்

**மும்பை, ஜூன் 14-**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை நினைத்து சிறிது பதற்றமாக இருப்பதாக இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மோர்க்கல் தெரிவித்துள்ளார்.

**லீட்ஸில்...**

இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றடைந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற ஜூன் 20 ஆம் தேதி லீட்ஸில் தொடங்குகிறது.

**பதற்றமாக...**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்பாக இந்திய அணி போதிய அளவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடாததால், இங்கிலாந்துக்கு எதிராக எப்படி செயல்படப் போகிறார்கள் என்பது குறித்து சிறிது பதற்றமாக இருக்கிறேன் என இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மோர்க்கல் தெரிவித்துள்ளார்.

**தீவிர பயிற்சி...**

இது தொடர்பாக அவர் பேசியதாவது: இங்கிலாந்தில் சிறப்பாக செயல்பட தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடுவது மிகவும் முக்கியம் என நினைக்கிறேன். இந்திய அணியின் பந்துவீச்சு தெரிவுகள் சிறப்பாக உள்ளது. ஒவ்வொரு வீரரும் தனிப்பட்ட முறையில் சிறந்த திறமைகளைக் கொண்டுள்ளனர். கடந்த சில நாள்களாக இந்திய அணி வீரர்கள் தீவிரமாக பயிற்சி மேற்கொண்டு வருவதை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

**நம்பிக்கையுடன்...**

இருப்பினும், குறைந்த அளவிலான சிவப்பு பந்து போட்டிகளில் விளையாடியுள்ளதால் சிறிது பதற்றமாகவும் இருக்கிறது. இளம் இந்திய அணி சிறப்பாக உள்ளது. இந்த டெஸ்ட் தொடரை வீரர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் தொடங்க வேண்டும். ஒரு அணியாக வீரர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றார்.

# கருப்பு பட்டையுடன் வீரர்கள்

குஜராத் மாநிலம் ஆமதபாத்தில் உள்ள விமான நிலையத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் பறக்க தொடங்கிய சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

இந்த நிலையில் , விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற விதமாக, நடைபெற்று வரும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா வீரர்கள் கையில் கருப்பு பட்டை அணிந்து விளையாடி வருகின்றனர் . மேலும் போட்டி தொடங்குவதற்கு முன் வீரர்கள் மவுன அஞ்சலி செலுத்தினர்

# சிப்ட் கவுர் சம்ரா வெண்கலம்

உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியின் முனிச் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் (3 நிலை) போட்டியில் இந்திய வீராங்கனை சிப்ட் கவுர் சம்ரா உள்பட 70 வீராங்கனைகள் பங்கேற்றனர். தகுதி சுற்றில் 2-வது இடம் பிடித்து 8 வீராங்கனைகளில் ஒருவராக இறுதி சுற்றுக்குள் நுழைந்த சம்ரா இறுதிப்போட்டியில் 453.1 புள்ளிகள் எடுத்து வெண்கலப்பதக்கத்தை வென்றார். இந்த பந்தயத்தில் உலக சாதனையாளராக விளங்கும் பஞ்சாப்பை சேர்ந்த 23 வயது சம்ரா இந்த ஆண்டு தொடக்கத்தில் பியூனஸ் அயர்சில் நடந்த உலகக் கோப்பை போட்டியில் தங்கப்பதக்கம் வென்று இருந்தார்.

மற்ற இந்திய வீராங்கனைகள் ஆஷி சோக்சி (589) 11-வது இடமும், அஞ்சும் மோட்ஜில் (586) 27-வது இடமும், ஸ்ரீயங்கா சடான்ஜி (582) 53-வது இடமும், நிஸ்சால் (580) 60-வது இடமும் பெற்று ஏமாற்றம் அளித்தனர். நடப்பு உலகக் கோப்பை போட்டியில் இந்தியா வென்ற 2-வது பதக்கம் இதுவாகும். ஏற்கனவே பெண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் பந்தயத்தில் இளவேனில் வெண்கலம் வென்றிருந்தார்.

### மதராசி குடியிருப்பு விவகாரம்:
# டெல்லி முதல்வருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஜூன் 14-**

மதராசி குடியிருப்பு விவகாரம் தொடர்பாக டெல்லி முதல்வருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தெற்கு டெல்லியின் கல்காஜி விரிவாக்கத்தில் உள்ள பூமிஹீன் முகாமில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர்களும் மூன்று நாட்களுக்குள் தாமாக முன்வந்து காலி செய்ய வேண்டும் என்று டெல்லி மேம்பாட்டு ஆணையம் அறிவித்திருந்தது. கடந்த ஜூன் 8, 9 மற்றும் 10 ஆகிய மூன்று நாட்களுக்குள் குடியிருப்பாளர்கள் காலி செய்ய வேண்டும் என்றும், தவறினால் குடியிருப்புகளுக்குள் உள்ள பொருட்களுக்கு அரசு பொறுப்பேற்காது என்றும், திட்டமிட்டபடி இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

இதனால், டெல்லி மேம்பாட்டு ஆணையத்தின் இந்த அறிவிப்பை அடுத்து, குடியிருப்புவாசிகள் அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், டெல்லி மதராசி குடியிருப்பு இடிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என அம்மாநில முதல்வர் ரேகா குப்தாவுக்கு தமிழ முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், "189 குடும்பங்களுக்கு நரேலாவில் வீடுகள் ஒதுக்கப்பட்டாலும் போதிய அடிப்படை வசதிகள் இல்லை என முதல்வர் மு.க.ஸ்டாலின் கடித்தத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தன்னை தனித்துவமாக காட்டிக் கொண்டவர் ரூபானி
### பிரதமர் நரேந்திரமோடி புகழஞ்சலி



**அகமதாபாத், ஜூன் 14-**

தனக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பணியிலும் அவர் தன்னை தனித்துவமாகக் காட்டிக் கொண்டார் என விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி குறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கல் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அகமதாபாத் விமான விபத்தில், விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்த நிலையில், அதில் பயணித்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இது குஜராத் அரசியலில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில், நேற்று காலை அகமதாபாத் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, விபத்து நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டார். பின்னர், விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்தார். இந்த பயணத்தின்போது, பிரதமர் நரேந்திர மோடி விஜய் ரூபானியின் குடும்பத்தினரையும் சந்தித்தார். அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்த பிரதமர், விஜய் ரூபானியுடனான தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்ட எக்ஸ் பதிவுகளில், "விஜய் ரூபானிஜியின் குடும்பத்தினரை சந்தித்தேன். விஜய் ரூபானி நம்மிடையே இல்லை என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. நான் அவரை பல பத்தாண்டுகளாக அறிவேன். மிகவும் சவாலான சில கால கட்டங்கள் உட்பட, நாங்கள் தோளோடு தோள் சேர்ந்து பணியாற்றி உள்ளோம்.

விஜய் ரூபானி பணிவானவராகவும், கடின உழைப்பாளியாகவும், கட்சியின் சித்தாந்தத்தில் உறுதியானவராகவும் இருந்தார். பதவிகளில் உயர்ந்து, அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, குஜராத்தின் முதலமைச்சராக விடாமுயற்சியுடன் பணியாற்றியவர் அவர். தனக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பணியிலும் அவர் தன்னை தனித்துவமாகக் காட்டிக் கொண்டார்.

இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் எனது எண்ணங்கள் உள்ளன. ஓம் சாந்தி" என தெரிவித்துள்ளார்.

# விமான விபத்தில் 241 பேர் உயிரிழப்பு: ஏர் இந்தியா அதிகாரப்பூர்வ அறிவிப்பு

**அகமதாபாத், ஜூன் 14-**

அகமதாபாத் விமான விபத்தில் 241 பேர் உயிரிழந்ததாக ஏர் இந்தியா அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து, லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் வானில் பறந்த சில நிமிடங்களில், அந்த விமானம் விமான நிலையம் அருகே உள்ள மெகானி என்ற இடத்தில் கட்டுப்பாட்டை இழந்து, அருகில் இருந்த பி.ஜே. தனியார் மருத்துவக் கல்லூரியின் விடுதிக்கட்டிடத்தில் மோதி வெடித்து சிதறியது. பேரிடர் மீட்பு படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். பயணிகள் உள்பட பலர் உடல் கருகி பிணமாக கிடந்தனர். அவர்களில் பலரது உடல்கள் அடையாளம் காணமுடியாமல் இருந்தது.

இந்நிலையில் விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேரும் உயிரிழந்ததாக ஏர் இந்தியா நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மேலும் இந்த கோர சம்பவத்தில், விஷ்வாஸ் குமார் என்ற பயணி ஒருவர் மட்டும் உயிர்தப்பினார் என்றும், அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பயணிகளில் 169 இந்தியர்கள், 53 இங்கிலாந்து நாட்டவர்கள், 7 போர்த்துகீசிய நாட்டவர்கள் மற்றும் 1 கனடா நாட்டவர் அடங்குவர். உயிர் பிழைத்தவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இங்கிலாந்து நாட்டவர் ஆவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே விபத்துக்குள்ளான விமானத்தில், குஜராத் மாநில முன்னாள் முதல்-மந்திரியும், பா.ஜனதா தலைவர்களில் ஒருவருமான விஜய் ரூபானியும் பயணித்தார். அவரும் இந்த விபத்தில் சிக்கி பலியானார் என்று அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீரங்கம் தொகுதியில் விஜய் போட்டி? த.வெ.க. போஸ்டரால் திடீர் பரபரப்பு

**திருச்சி, ஜூன் 14-**

விஜய் ஸ்ரீரங்கத்தில் போட்டியிடுகிறாரா என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழக முதல் மாநாடு பிற அரசியல் கட்சிகளை மிரள வைத்தது. சமீபத்தில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏக்கள், ஐ.ஆர்.எஸ். அதிகாரி போன்ற பிரபலங்கள் கட்சியில் இணைந்தது அக்கட்சியினருக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே, வருகிற 22-ந் தேதி விஜய் பிறந்த நாளை விமரிசையாக கொண்டாட தமிழகம் முழுவதும் தொண்டர்கள் தயாராகி வருகின்றனர். திருச்சியிலும் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. வருகிற சட்டமன்றத் தேர்தலில் விஜய் எந்த தொகுதியில் போட்டியிடப் போகிறார் என்ற எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் திருச்சி மாநகர் மாவட்ட தொண்டர் அணி சார்பில் புத்தூர் நால் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. அதில் ஜூன் 22-ந்தேதி பிறந்தநாள் காணும் திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதி மக்களின் மனம் கவர்ந்த வேட்பாளரே வாழ்க பல்லாண்டு என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

இதனால் விஜய் ஸ்ரீரங்கத்தில் போட்டியிடுகிறாரா என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. ஆனால் நிர்வாகிகள் தரப்பில் கேட்டபோது, மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். ஸ்ரீரங்கத்தில் போட்டியிட்டால் விஜய்யை வெற்றி பெற வைப்போம் என நம்பிக்கை தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் தமிழக வெற்றி கழகத்தின் செல்வாக்கு தொடர்பான சர்வே நடத்தப்பட்டது. இதில் திருச்சி கிழக்கு, கடலூர், சிதம்பரம், கன்னியாகுமரி உள்ளிட்ட சில தொகுதிகள் அக்கட்சிக்கு பெரும் சாதகமாக இருப்பது தெரிய வந்தது. இதற்கிடையே திருச்சியை போன்று கடலூர், மதுரை போன்ற மாவட்டங்களிலும் விஜய் போட்டியிட வலியுறுத்தி அக்கட்சியினர்கள் சுவரொட்டி ஒட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால் விஜய் எந்த தொகுதியில் போட்டியிடுகிறார் என இதுவரை உறுதியாக வில்லை என கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

தி.மு.க. ஆட்சி காலத்தில்தான்

# மக்காச்சோளம் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டது

## அமைச்சர் அர. சக்கரபாணி பெருமிதம்



**ஒட்டன்சத்திரம், ஜூன் 14-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கள்ளி மந்தயம், கரியாம்பட்டி, அப்பியம்பட்டி, பெருமாள் கோவில் வலசு, பொருளூர், மேட்டுப்பட்டி, வாகரை உள்ளிட்ட ஊராட்சிகளில் சுமார் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய தார் சாலை, நிழற்குடை, நியாயவிலைக்கடை கட்டிடம், மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி, அங்கன் வாடி மையம் உள்ளிட்டவை கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியும், கட்டி முடிக்கப் பட்ட திட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசுகை யில். தமிழ்நாடு முதல்வர் தன்னை முன்னிலைப்படுத் மல் தமிழகத்தை முன்னி லைப்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். கள் ளிமந்தயம் ஊராட்சியில் இதுவரை சுமார் 150 கோடி அளவில் திட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தேர்தல் வாக்குறுதியாக விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஆதார விலையாக ஒரு குவிண்டாலுக்கு 2500 ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி யாக அறிவித்திருந்த நிலை யில், தற்போது முதல்வர் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றி நெல்லுக்கு ஆதார விலையாக ஒரு குவிண்டாலுக்கு 2545 ரூபாய் கூடுதலாக வழங்கியுள்ளார், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நெல்லுக்கு ஆதார விலை 1960 மட்டுமே வழங்கி வந்த நிலையில் 600 ரூபாய் உயர்த்தி வழங்கி உள்ளார். முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சி காலத்தில் தான் வாகரை யில்மக்காச்சோள ஆராய்ச்சி மையம் அமைக் கப்பட்டது.

புதிய கல்விக் கொள் கையை ஏற்றுக் கொள்ளாத தால் ஒன்றிய அரசு தமிழ கத்தை வஞ்சிக்கிறது. அனைத்து தரப்பு மக்களிட மும் பாகுபாடு பார்க்காமல் திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வ ருக்கு நீங்கள் என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டு மென பேசினார்.

நிகழ்வில் மாவட்டத் துணை செயலாளர் ராஜாமணி, பழனி கோட்டாட்சியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபு பாண்டியன், தாஹிரா, வட்டாட்சியர்கள் சஞ்சய்காந்தி, பிரசன்னா, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் பொன்னுவேல், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தங்கம், முன்னாள்ஊராட்சி மன்ற தலைவர்கள் கலைச்செல்வி இராசு, ராஜேஷ், கனேசன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி உள்ளிட்ட முன்னாள் உள் ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில்

# முதல்வரின் மருத்துவ காப்பீடு அட்டைபெற சிறப்பு முகாம்

**ராமநாதபுரம், ஜூன் 14-**
முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின்கீழ் அட்டை பெற ராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் விடுபட்ட பய னாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை பதிவு செய்யும் சிறப்பு முகாம் கிராம வாரி யாக மே 3 முதல் ஜூலை 16 வரை ஊராட்சி மன்ற அலுவல கங்களில் நடைபெற்று வருகிறது. இம்முகாமானது ஆறாவது கட்டமாக இன்று 14.06.25 பாம்பன் ஊராட்சி மன்ற அலுவல கத்திலும், 17.06.2025 அன்று ராமேஸ்வரம் நகராட்சி அலுவல கத்திலும் நடைபெறவுள்ளதால், மேற்கண்ட பகுதி மற்றும் அதை சுற்றியுள்ள கிராம பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமிற்கு பதிவு செய்ய வருவோர் குடும்ப அட்டை நகல் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதார் அட்டை நகல் எடுத்து வர வேண்டும் எனவும் இது வரை பதிவு செய்யாமல் இருப்பவர்கள் கலந்து கொண்டு இவ்வாய்ப்பை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மாவட்ட திட்ட அலுவலர்; 7373004588 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை ராம நாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரி வித்துள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள

# திருவண்ணாமலை கோவில் உண்டியல் திறப்பு

**விருதுநகர், ஜூன் 14-**
ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பக்தர்களால் தென் திருப்பதி என அழைக்கப்படும் திருவண்ணாமலையில் சீனிவாச பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோயிலில் வைக்கப்பட்டிருந்த 8 உண்டியல்கள் திறந்து எண்ணும் பணி நேற்று கோவில் மண் டபத்தில் வைத்து நடைபெற்றது. கோவில் செயல் அலுவலர் சக்கரை அம்மாள் அறநிலையத்துறை சரக ஆய்வர் செ. முத்து மணிகண்டன் கண்காணிப்பாளர் ஆவுடையம்மாள் ஆகியோர் முன்னிலையில் உண்டியல் திறக்கப்பட்டு எண்ணும் பணி நடைபெற்றது. இதன் முடிவில் ரொக்க பணம் ரூ3 லட்சத்து 320 இருந்தது. உண்டியல் எண்ணிக்கை பணியின் போது கோவில் அலுவலர்களும் பணியாளர்களும் மகளிர் சுய உதவி குழு பெண்களும் சேவை செய்தனர்.

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில்

# தி.மு.க. எதிர்க்கட்சி அந்தஸ்தை கூட பெறாது: முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேச்சு



**திருமங்கலம், ஜூன் 14-**
2026 சட்டமன்ற தேர்த லில் தி.மு.க.வால் எதிர்க் கட்சி அந்தஸ்தை கூட பெற முடியாது என திருமங்கலம் நகரில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேசி னார்.

அ.தி.மு.க.பொதுச்செய லாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் திருமங்கலம் நகர் பகுதி வாக்குச் சாவடி 57-ல் இருந்து 84 வரையுள்ள முகமதுஷாபுரம், அண்ணாநகர், காட்டு மாரியம்மன் கோவில் பகுதி உள்ளிட்ட 27-க்கும் மேற் பட்ட வார்டுகளில் புதிய வாக்குச்சாவடி முகவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான ஆ லோசனைக் கூட்டம் கொடி அரங்கில் திருமங்கலம் நகர செயலாளர் ஜே.டி. விஜயன் தலைமையில் நடைபெற் றது.

இதில் ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த கூட் டத்தில் முன்னாள் அமைச்ச ரும் தமிழக சட்டமன்ற எதிர் கட்சி துணைத் தலைவரு மான ஆர்.பி.உதயகுமார் சிறப்பாளராக பங்கேற்று தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பூத் கிளை நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதையடுத்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பா டியாரின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு அன்னதானம் வழங்கப்பட் டது.

இதனைத் தொடர்ந்து முன்னாள் ம.தி.மு.க. மாவட்ட துணைச் செயலாள ரும், நகரச் செயலாளருமான அனிதா பால்ராஜ் மற்றும் விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட அமைப்பாளர் பெருமாள் மற்றும் தொண் டர்கள் முன்னாள் அமைச்சர் முன்னிலையில் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் ஆர்.பி உதயகுமார், நகரச் செயலா ளர் ஜே.டி.விஜயன் ஆகி யோர் பொன்னாடை அணி வித்து வரவேற்றனர். இதை யடுத்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசுகை யில்:-

புலியை பார்த்து பூனை சூடு போட்ட கதையாக 30 சதவீத வாக்காளர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என முதல்வர் ஸ் டாலின் உத்தரவு போட்டுள் ளார். உத்தரவு உத்தரவாக தான் உள்ளது அதை செயல் படுத்த முடியவில்லை. இன் றைக்கு தலைநகரில் உடன்பி றப்பே வா தலைப்பில் கட்சி நிர்வாகிகளை உசிலம்பட்டி தொகுதி உள்பட பல்வேறு தொகுதி நிர்வாகிகளை முதல்வர் சந்திக்கிறார். ஏனென்றால் கட்சித் தொண் டர்களுக்கும் தலைமைக்கும் ஒரு இடைவெளி ஏற்பட்டுள் ளது உளவுத்துறை தகவல் கொடுத்துள்ளனர். இந்த நிலையில் போனால் வருகிற 2026 இல் தி.மு.க. உங்கள் தலைமையில் எதிர்க்கட்சி அந்தஸ்தை கூட பெற முடி யாது. எனவே 234 தொகுதிக் கும் உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் ஸ்டாலின் சந்திப்பை தொடங்கி இருக் கிறார் தங்கக் காசாக கொட்டி கொடுத்தாலும் அங்கே போக தயாராக இல்லை. எடப்பாடியார் தலைமையில் தமிழகம் அணிவகுத்து நிற்கி றது என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன் னாள் எம்.எல்.ஏ. மாணிக்கம், எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் புளியங்குளம் ராமகிருஷ்ணன், மாவட்ட அவைத் தலைவர் முருகன், வர்த்தக அணி மாவட்டச் செயலாளர் சதீஷ் சண்முகம், சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் ஜஹாங்கீர் மற் றும் திருமங்கலம் நகர நிர் வாகிகள் உள்ளிட்ட ஏராள மானோர் கலந்து கொண்ட னர்.

# நத்தம் அருகே பைக் மோதி வாலிபர் பலி

**நத்தம், ஜூன் 14-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பூசாரிபட் டியை சேர்ந்தவர் விஜயன். (48). இவரது மகன் மணி (25). இவர் சிங்கப்பூரில் வேலை செய்து வந்தார். விடுமுறைக் காக ஊருக்கு வந்த அவர் சம் பவத்தன்று இரவு ஒத்தினி பட்டி திருவிழாவிற்கு சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டி ருந்தார். சிறுகுடி- தேத்தாம் பட்டி பகுதியில் சென்று கொண்டிருந்த போது பின் னால் பூதகுடியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் (34) என்பவர் ஓட்டி வந்த பைக் அவர் மீது மோதியது.



இதில் தூக்கி வீசப்பட்ட மணி சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியானார். தக வலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக் காக அனுப்பி வைத்தனர்.மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

அருப்புக்கோட்டை பாலையம்பட்டியில்

# 100 நாள் வேலை வழங்கக்கோரி கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



**அருப்புக்கோட்டை, ஜூன் 14-**
.அருப்புக்கோட்டை ஒன் றியம் பாலையம்பட்டி ஊராட்சியில் உள்ள வேல்மு ருகன் காலனி, தீர்த்தக்கரை புளியம்பட்டி காலனி சிலோன் காலனி இ பி காலனி காமராஜர் நகர் பசும் பொன் நகர் இந்திரா நகர் திருக்குமரன் நகர் ராஜீவ் நகர் இராமலிங்கா நகர் போஸ் டல் காலனி ஆகிய அனைத்து பகுதிகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் அடிப் படையில் 100 நாள் வேலை வழங்க வலியுறுத்தி காவிரி வைகை கிருதுமால் குண் டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் மாவட்டத் தலைவர் ரா ராம் பாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

ஆர்ப்பாட்ட கோரிக்கை களை விளக்கி சமூக ஆர்வ லர் ராஜா ராம், மாவட்டச் செயலாளர் கோபாலகிருஷ் ணன், மாவட்ட துணைச் செயலாளர் கனகசபாபதி, கட்டுமான தொழிலாளர் சங் கத் தலைவர் சித்தார்த்தன், மனோகரன் நந்தகுமார் ஆகி யோர் பேசினார்கள்.

காவிரி வைகை கிருது மால் குண்டாறு பாசன விவ சாயிகள் கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் எம் அர்ச்சுணன் நிறைவாகப் பேசி ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

ஆர்ப்பாட்டத்தில் மகளிர் குழு நிர்வாகிகள் , பத்மா, சாந்தி ,சித்ரா, மணிமேகலை ,ராணி, சித்தாயி அம்மாள் உள்பட 200க்கும் மேறப்பட்ட பெண்கள் கலந்து கொண்ட னர்.

# தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் இணையும் தனியார் டி.வி. ஆப்ரேட்டர்கள்

## ஆபரேட்டர்கள் வாரியத் தலைவர் தகவல்



**திண்டுக்கல், ஜூன் 14-**
தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் குறைந்த கட்டணம் மற்றும் மானிய விலையில் எச்டி செட்டாப் பாக்ஸ் வாங்க துரி தமாக வங்கி கடன் வழங்கப் பட்டு வருவதாலும் பல தனி யார் கேபிள் டி.வி. ஆபரேட் டர்கள் அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் ஆர்வமுடன் இணைய தொடங்கியுள்ள னர்.

இதனால் தற்போது கேபிள் ஆபரேட்டர்கள் மற் றும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மள மள என்று அதிகரித்து வருகிறது என தமிழ்நாடு அரசு கேபிள் டி. வி. வாரிய தலைவர் தஞ்சை ஜீவா தெரிவித்தார்.

தமிழகம் முழுவதிலும் வாரிய தலைவர் தஞ்சை ஜீவா சூறாவளி சுற்றுப்பய ணமாக ஒவ்வொரு மாவட் டத்திற்கும் நேரடியாக சென்று தமிழ்நாடு அரசு கேபிள் கட்டுப்பாட்டு அறையை ஆய்வு செய்து ஆப்பரேட்டர்களை சந்தித்து வருகிறார்.அதன் ஒரு பகுதி யாக திண்டுக்கல்லில் அரசு கேபிள் கட்டுப்பாட்டு அறையை ஆய்வு செய்தார் அப்போது அவருடன் தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. திண்டுக்கல் மாவட்ட தாசில் தார் ஸ்ரீ காந்தி, தொழில்நுட்ப உதவியாளர் பூசாரி குமார், உதவி தொழில் நுட்ப உதவி யாளர்கள் ,அலுவலர்கள் மற் றும் திண்டுக்கல் மாவட்ட கேபிள் ஆபரேட்டர்கள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. ஆபரேட்டர்களின் எட்டு ஆண்டு கால கோரிக் கையான எச்டி உயர் வரை யறை செட்டாப் பாக்ஸ் வழங்கப்பட்டு வருவதை யும், தடையில்லா சிக்னல் மற்றும் தனியார் நிறுவனத் திற்கு நிகராக உள்ளூர் சேனல்கள் ஆகியவற்றை வழங்கி வருவதையும், அவர் ஆய்வு செய்தார்.

அரசு கேபிள் டி.வி.யில் இருந்து பல்வேறு காரணங்க ளுக்காக வெளியேறி, தனி யார் நிறுவனத்திற்கு சென்ற ஆபரேட்டர்கள், தற்போது அரசு கேபிளில் சேவை மற் றும் குறைந்த கட்டணம் ஆகியவற்றால் ஆர்வத்துடன் மீண்டும் அரசு கேபிள் டி. வி.யில் இணைந்து, கேபிள் டி.வி. சேவையைப் பெற்று பொதுமக்களுக்கு சிறப்பாக வழங்கி வருவதாக, கேபிள் ஆபரேட்டர்கள் வாரிய தலைவர் தஞ்சை ஜீவா அவர் களிடம் மகிழ்ச்சியுடன் தெரி வித்தனர்.

மேலும் கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரை வங்கி கடன் வழங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஆப்பரேட் டர்களுக்கு உடனடியாக கட னுதவி 25 ஆயிரம் கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு புதிய எச்டி செட்டாப் பாக்ஸ் வாங்க ரெண்டு லட்ச ரூபாய் வீதம் 500 கோடி வழங்க ஒப் புதல் மேற்கொள்ளப்பட்டது டன், ஆபரேட்டர்களுக்கு தாமதம் இன்றி வங்கி கடன் மூலம் எச்டி செட்டாப் பாக்ஸ் வழங்கி வருவதற் கும், நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இதற்காக தமிழக முதல் வர் மு க ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டா லின், தகவல் தொழில்நுட் பத் துறை அமைச்சர் பழனி வேல் தியாகராஜன், கேபிள் டி.வி. வாரிய தலைவர் தஞ்சை ஜீவா மற்றும் கேபிள் டி.வி. மேலாண்மை இயக்கு னராக கூடுதல் பொறுப்பாக செய்தித்துறை இயக்குனர் வைத்தியநாதன் ஆகியோருக் கும் கேபிள் டி.வி. ஆபரேட் டர்கள் நன்றி தெரிவித்தனர்.

ஆய்வை தொடர்ந்து வாரிய தலைவர் தஞ்சை ஜீவா கூறுகையில், அரசு கேபிள் டி.வி. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற் பட்ட தொழில்நுட்ப கோளா றுகள் சரிசெய்யப்பட்டு தேவைக்கேற்ப உள்ளூர் சேனல்களும் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது மேலும் ஆபரேட்டர்களுக்கு தடையில்லாத சிக்னலை உறுதி செய்ய தொடர் நடவ டிக்கை எடுத்து வருகிறோம் மிகவும் எளிதாக வங்கி கடன் பெற்று தந்து புதிய எச் டி செட்டாப் பாக்ஸ் துரித மாக வழங்கி வருவதால், படிப்படியாக வாடிக்கையா ளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வருகிறது விரைவில் தமிழ்நாடு முதல்வர் அவர்க ளின் ஒப்புதல் பெற்று துணை முதல்வர் வழிகாட்டு தலுடன் அரசு கேபிள்டி.வி. விநியோகஸ்தர்களையும் ஆ பரேட்டர்களையும் பங்குதா ரர்களாக்க மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோ சித்து வருகிறோம் என்று தெரிவித்தார்.

கீழடி அகழாய்வு அய்வறிக்கை:

# பா.ஜ.க.வை கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டம்

## மதுரையில் 18-ம் தேதி நடக்கிறது

**மதுரை, ஜூன் 14-**
அறிவியல்பூர்வமாக கீ ழடி அகழாய்வுகள் நிரூபிக் கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் பாஜகவை கண் டித்து மதுரையில் வருகிற 18-ம் தேதி திமுக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவிருப்பதாக மா ணவர் அணிச் செயலாளர் ராஜீவ்காந்தி தெரிவித்துள் ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, கீழடி என்கிற பெயரே பா.ஜ.க. அரசுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. கீழடி ஆய்வை மேற்கொள் ளவே நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது.

அகழாய்வை மேற் கொண்ட அதிகாரிகள் பாஜக வின் குரலாக ஒலிக்க வில்லை என்பதற்காக அவர் கள் தூக்கி எறியப்பட்டார் கள்.

கடந்தகால அடிமை எடப்பாடி அரசும் பாஜக-வி னரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கீழடி அகழாய் வைக் கிடப்பில் போட்டது. தமிழ்நாட்டில் கழகத் தலை வர் தலைமையிலான அரசு அமைந்ததும் கீழடி அகழாய் வுக்குப் புத்துயிர் கொடுத்த தோடு துரிதமாக பலகட்ட ஆய்வுகள் நடத்தி அருங்காட் சியகத்தையும் கட்டியெழுப் பினார்.

அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக் கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத பாஜக அரசைக் கண்டித்து வருகிற ஜூன் 18-ம் தேதி காலை 10 மணிக்கு தி.மு.க. மாணவர் அணி சார்பில், மது ரை, வீரகனூர் சுற்றுச்சாலை யில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில், கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகி கள் - மாவட்ட, மாநகர, ஒன் றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப் பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திர ளாக பங்கேற்று, போராட் டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.”

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ராமநாதபுரம் மாவட்டத்தில் திருநங்கைகள் உயர்கல்வி பயில உதவித்தொகை

**ராமநாதபுரம், ஜூன் 14-**
ராமநாதபுரம் மாவட்டத் தில் திருநங்கைகள் உயர் கல்வி பயில உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்ப டுத்தப்படுவதால் பயன்ப டுத்தி கொள்ளுமாறு கலெக் டர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

திருநங்கைகளின் நல் வாழ்விற்கென நாட்டிற்க்கே முன்னோடியாக பல்வேறு புதுமையான திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இவர்களின் சமூக பொரு ளாதார மேம்பாட்டினை உறுதி செய்து வாழ்க்கையில் வெற்றிபெற அவர்கள் உயர் கல்வி கற்பது இன்றியமை யாததாகும். திருநங்கைகள் பாலின மாற்றத்தினால் குடும்பத்தை விட்டு வெளி யேற்றப்படும் நிலையில் அவர்களும் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வாதாரத் தினை நடத்த வேண்டிய கட் டாயத்தின் காரணமாக பலர் கல்வியினை இடைநிற்றல் செய்ய நேர்கிறது என்றும் திருநங்கைகள் கல்வி உட் பட அனைத்து முயற்சிகளி லும் பாகுபாடு மற்றும் பல் வேறு தடைகளை எதிர் கொள்கின்றனர் என்றும் அவர்களில் ஒரு சிலர் மட் டுமே இத்தடைகளை தாண்டி கல்வி பயில முன் வருகின்றனர் என்றும் அவ் வாறு முன் வரும் திருநங்கை களின் கல்வி கனவினை நிறைவேற்றுவதற்காக மற்ற வர்களைப்போன்றே சம மான கல்வி வாய்ப்புகளை உறுதிசெய்யும் பொறுப் பினை உணர்ந்து அவர்கள் கல்வி கற்கும் சூழலுக்கு தேவையான மாற்றங்களை செய்தல் அவசியமாகிறது என்பதால் சமூகநலத்துறை யின் கீழ் செயல்படுத்தப்ப டும் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதம்தோறும் ரூபாய் ஆயி ரம் உதவி தொகை வழங்கும் திட்டம் தற்போது திருநங் கைகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

மேலும் இந்திட்டத்தி லில் தமிழ்நாடு அரசால் உயர்கல்வி பயிலும் திருநங் கைகள் அனைவருக்கும் கல் விக்கட்டண, விடுதிக்கட்ட ணம், உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் அரசே ஏற்கும் என்று அறிவிப்பு செய்துள்ளதைத் தொடர்ந்து திருநங்கைகளின் உயர்கல் வியை உறுதிப்படுத்தும் வித மாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம் (புதுமைப் பெண்) மற்றும் தமிழ்ப்புதல் வன் திட்டத்தில் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபா லினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கைகளும் பயன்பெ றும் வகையில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை தமிழ் வழி யில் படித்திருக்க வேண்டும் என்பதை முழுவதுமாக தளர்வு செய்து தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத் தால் வழங்கப்பட்ட அடை யாள அட்டையினை சான் றாக சமர்ப்பித்து இத்திட்டத் தில் பயன்பெறலாம்.

இந்த தகவலை ராமநாத புரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

### அறிவாலயத்தில் 3 மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளை

# தனித்தனியாக சந்தித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்படும்படி அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 14-

2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் ஒவ்வொரு தொகுதிகளிலும் தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பை ஆய்வு செய்வதற்காக தி.மு.க. நிர்வாகிகளுடன் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தனியாக சந்தித்து பேசும் "உடன்பிறப்பே வா" நிகழ்ச்சி தொடங்கியது. இதில் சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி ஆகிய 3 தொகுதிகளை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வரவழைத்து உரையாடினார்.

2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கை முன்வைத்து தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று அந்தந்த மாவட்ட நிர்வாகிகளை சந்தித்து வருகிறார். தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு நிலவரம் எப்படி உள்ளது என்பதையும் அவர்களிடம் கேட்டறிந்து வருகிறார்.

இந்த நிலையில் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் 30 சதவீத வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினராக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கட்டளையிட்டுள்ளார். இதற்காக உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்ப படிவங்கள் தயாரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வருகிற 20-ம் தேதி முதல் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை தொடங்க உள்ளது.

இதற்கிடையே மதுரையில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்," ஜூன் முதல் வாரத்தில் இருந்து, என்னுடைய பணி என்னவென்றால், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் தி.மு.க. நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரிவாக, தனித்தனியாக பேசுவோம்.

தி.மு.க. உடன் பிறப்புகளுடனான உறவு என்பது அரசியல் கட்சி என்ற அளவிலும், நிர்வாகிகள், தொண்டர்கள் என்ற அளவிலும் இருக்கும் தொடர்புகளை போன்றதல்ல. தி.மு.க. தொண்டர்களும், நிர்வாகிகளும் தி.மு.க.வின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் காத்து நிற்கக் கூடியவர்கள். அப்படிப்பட்ட உடன் பிறப்புகளை கலைஞர் வழியில், அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து எளிமையாக உரையாட உள்ளேன்" என்றார்.

இந்நிலையில், 2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் ஒவ்வொரு தொகுதிகளிலும் தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பை ஆய்வு செய்வதற்காக தி.மு.க. நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித்தனியாக சந்தித்து பேசும் "உடன் பிறப்பே வா" நிகழ்ச்சி நேற்று தொடங்கியது.

நேற்று காலையில் சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி ஆகிய 3 தொகுதிகளை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வரவழைத்து உரையாடினார். இந்த ஆலோசனையில் 3 தொகுதிகளையும் சேர்ந்த ஒன்றிய செயலாளர், நகர செயலாளர், பேரூர் செயலாளர் மற்றும் தொகுதியின் பொறுப்பாளர், மண்டல பொறுப்பாளர், அமைச்சர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஒரு தொகுதிக்கு அதிகபட்சமாக 7 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித்தனியாக அழைத்து, தொகுதியில் சட்டசபை தேர்தலை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள், தொகுதிகளின் வெற்றி வாய்ப்பு நிலவரம் ஆகியவை குறித்து விரிவாக கேட்டறிந்தார். கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் சிதம்பரம், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகள் அ.தி.மு.க. வசம் சென்றன. எனவே கடந்த தேர்தலில் அ.தி.மு.க. வென்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று தி.மு.க. தலைமை ஏற்கனவே உத்தரவிட்டு உள்ளது.

அதன் தொடர்ச்சியாக கடந்த தேர்தலில் அ.தி.மு.க. வென்ற தொகுதிகளில் இருந்தே தனது "உடன் பிறப்பே வா" என்னும் தொகுதி வாரியான கட்சி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டி உள்ளார்.

அதன்படி சிதம்பரம், உசிலம்பட்டி தொகுதி நிர்வாகிகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் வருகிற தேர்தலில் இந்த தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி தேர்தல் பணியாற்ற வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியை சேலத்தில் உள்ள அவரது இல்லத்தில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் பதவிக்கான தேர்தலில், அ.தி.மு.க.வின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட்ட ஐ.எஸ்.இன்பதுரை மற்றும் ம.தனபால் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சான்றிதழை நேரில் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

# அ.இ.அ.தி.மு.க. மாநிலங்களவை புதிய உறுப்பினர்கள் இ.பி.எஸ்.சிடம் வாழ்த்து

சென்னை, ஜூன் 14-

அ.தி.மு.க. மாநிலங்களவை புதிய உறுப்பினர்கள் தங்களது சான்றிதழ்களை காண்பித்து, எடப்பாடி பழனிசாமியிடம் வாழ்த்து பெற்றனர்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் நாடு முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமியை, சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (13.6.2025 – வெள்ளிக் கிழமை), அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட, கழக வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் இன்பதுரை, செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவரும், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு முன்னாள் தலைவருமான ம. தனபால், ஆகியோர் நேரில் சந்தித்து, மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை காண்பித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றனர்.



டெல்லி முதல்வர் ரேகா குப்தாவை நேற்று புதுடெல்லியில் டி.ஆர்.பாலு எம்.பி. சந்தித்து டெல்லி ஜங்புரா மதராசி கேம்ப் பகுதியில் உள்ள தமிழர்களின் வீடுகள் இடிக்கப்பட்டதையொட்டி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தருதல், தமிழ்வழி பள்ளி அமைத்தல், வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்குவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தை வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், ஆணையர் ஆஷிஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரை அச்சம்பத்து பகுதியில் உள்ள மாரியம்மன் மந்தை திடலில் மேற்கு சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து ரூ.10 லட்சம் மதிப்பில் சந்தன மாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜை செய்த பின்பு மேற்கூரை அமைப்பதற்கான பூமிபூஜையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் ஜெயந்தி ராஜூ மற்றும் நிர்வாகிகள் வில்லாபுரம் ஜெ.ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கு.திரவியம், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், கே.ஜெயவேல், மார்க்கெட் மார்நாடு, கார்னர் பாஸ்கர், மதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தஞ்சைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை தரவுள்ளதை முன்னிட்டு பூதலூர் கல்லணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி.செழியன் ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், காவல்துறை தலைவர் ஜோஷி நிர்மல் குமார், துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், தலைமை பொறியாளர் ஆர்.தயாளகுமார், கண்காணிப்பு பொறியாளர் எம்.சண்முகம், செயற்பொறியாளர்கள் எம்.இளங்கோ, நித்தியானந்தம், உதவி செயற்பொறியாளர்கள் சிவக்குமார், யோகேஸ்வரன், முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

### விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்பு:

# விபத்துக்கான காரணம் விரைவில் தெரியவரும்

அகமதாபாத், ஜூன் 14-

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ள நிலையில், அது ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.




குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து 242 பேருடன் லண்டன் சென்ற ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த பயங்கர விபத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட விமானத்தில் சென்ற 241 பேர் உயிரிழந்தனர். தரையில் விழுந்த விமானம், மருத்துவ கல்லூரி விடுதியில் மோதியதில், மருத்துவ மாணவர்கள் 10 பேரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்து குறித்து அகமதாபாத் விமான நிலைய வட்டாரங்கள் கூறும்போது, ''விமான நிலையத்தின் ஓடுபாதையில் ஏர் இந்தியா விமானம் சரியான வேகத்தில் தான் இயக்கப்பட்டுள்ளது. ஆனால், தரையைவிட்டு பறக்க தொடங்கிய பிறகு, போதுமான உயரத்துக்கு மேலே எழும்பவில்லை. அடுத்த 2 நிமிடங்களில் விமானம் கீழே விழுந்து நொறுங்கியுள்ளது.

கீழே விழுந்த வேகத்தில் பயங்கரமாக தீப்பிடித்து எரிந்தது. லேண்டிங் கியர் கோளாறு காரணமாக விமான சக்கரம் ஏதாவது கட்டிடம் மீது மோதியிருக்கலாம். விமான இன்ஜினில் பறவைகள் மோதியிருக்கலாம். விமான இன்ஜினில் திடீரென கோளாறு ஏற்பட்டிருக்கலாம். இதுபோன்ற காரணங்களால் விபத்து நேரிட்டிருக்க வாய்ப்பு உள்ளது. விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளது. அதை ஆய்வு செய்ய வேண்டும். விபத்து குறித்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும். அதன் பிறகே, விபத்துக்கான உண்மையான காரணம் தெரியவரும்'' என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ள நிலையில், ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை ஆய்வு செய்து, அதில் பதிவான தகவல்களை பெற 15 நாட்கள் வரை ஆகும். இதன்பிறகே, விபத்துக்கான உண்மையான காரணம் தெரியும் என்று விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறினர். '



சென்னை தண்டையார்பேட்டை காமராஜர் நகரில் எழுது பொருள் மற்றும் அச்சுத்துறையின் சார்பில் அரசு அச்சக பணியாளர்களுக்காக புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அருகில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், ஆணையர் வெ.ஷோபனா, தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே. ராஜாராமன், மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நேற்று 10, 12-ம் வகுப்புகளில் சிறந்த மதிப்பெண்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு த.வெ.க. சார்பில் நடைபெற்ற 3-ம் கட்டமாக விருது வழங்கும் விழாவில் மாணவிக்கு த.வெ.க. தலைவர் விஜய் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்.